522

# தமிழ் முரசு



0-,6x
N46.7
56176

திப்பாசிரியர்:

ஞான கிராமணியார்

# தமிழன் குரல்

ஆசிரியர் :

திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள்

புதிய தமிழகத்தை —
தமிழகத்தில் தனியரசைக்
காண விரும்பும்
தமிழ் இனத்தவருக்கு
இந்நூல் வழிகாட்டி

தமிழர் திரு விழாவாகிய

**தைப் பொங்கல்**

நாளில்

வெளிவரும்

100 பக்கம் — விலை ரூ. 1—0—0

தமிழ் முரசுப் பதிப்பகம்

# தமிழ்முரசு

ஏழாவது புத்தகம்

28 DEC 1946
MADRAS

பதிப்பாசிரியர் :

ம. பொ. சிவஞானம்

விலை நான்கணா

வெளி நாடு ஐந்தணா

233, லிங்கி செட்டி தெரு,

சென்னை—1

# ஓர் நற்செய்தி

தமிழ் இனத்தவருக்கு ஓர் நற்செய்தி.

'தமிழ் முரசு' இதுவரை புத்தகம் என்ற பெயரால் மாதம் ஒருமுறை உங்கள் காதுகளில் ஒலித்து வந்தது.

'தமிழ் முரசு' இப்போது மாதமிரு முறைப் பத்திரிகையாக வெளிவர அரசாங்கத்தாரின் அனுமதி கிடைத்து விட்டது. எனவே, 1947-ம் ஆண்டு ஜனவரியிலிருந்து பிரதி மாதமும் முதல் தேதி, பதினைந்தாந் தேதிகளில் வெளி வரும்.

'தமிழ் முரசு' பத்திரிகையின் அளவு, பக்கங்கள், விலை ஆகியவை இதுவரை இருந்தது போலத்தான்.

தமிழ் இனம் வாழ்வு பெறவும், தமிழ் மொழி வளர்ச்சி பெறவும், தமிழ் நிலம் ஒன்றுபடவும் வழி காட்டக் கூடிய கட்டுரைகள், துண்டுபட்ட கவிதைகள், கதைகள், செய்திகள், படங்கள் ஆகியவைகள் பிரசுரிக்கப் படும்.

தமிழ் இனத்தார் இதுவரை எமது முயற்சியை ஆதரித்தது போலவே, இனியும் ஆதரிக்குமாறு வேண்டுகின்றோம். ஆதரிப்பது திண்ணமென்றும் நம்புகின்றோம்.

வாழ்க தமிழகம் ! வாழ்க தமிழினம் !!

'தமிழ் முரசு' பதிப்பகத்தார்.

# முரசு கொட்டிச் சொல்லடா!

"தமிழ் ஒளி"

தமிழர்நாட்டின் வீதிதோறும் வீடுதோறும் முரசொலி!
தலைகுனிந்த நாள்ஒழிந்து போனதென்ற பேரொலி!

குமுறுகின்ற மறவர்ஒன்று கூடியின்று வருகவே! [வோம்!
கொடிபிடித்து முரசுகொட்டி வெற்றிகொண்டு வாழு

தமிழருக்கு அரசுதிட்டம் தமிழர்செய்து கொள்ளுவோம்!
தகுதியின்றிச் செய்திருக்கும் திட்டம்வீழச் செய்கு
[வோம்!

எமதினத்தின் அரசுவேண்டும்; இல்லையென்று சொல்லிட
எவனுமிங்கு இல்லை;—இந்த நாடுஎங்கள் நாடடா!

பிரிந்துவாழும் உரிமைஎங்கள் பிறவிதந்த உரிமையாம்;
பிறர்மறுக்க நியாயமில்லை-முரசுதன்னைக் கொட்டுவோம்!

இருந்திருந்து பொறுமையாக சிறுமை வாழ்வை
[எய்தினோம்;
இரையைத்தேடும் சிங்கமாக எழுந்திருந்து வருகுவீர்!

தோள்உயர்த்தி முரசுகொட்டிச் சங்கம்ஊதிச் சொல்லடா!
'சொந்தம்இந்த நாடு,எங்கள் சொந்தமென்று' சொல்
[லடா!

வாள்பிடித்து அணிவகுத்து யுத்தமுரசு கொட்டடா!
[illegible]

வாழ்வு எங்கள் கையில் என்று முரசு கொட்டிச்
[சொல்லடா!

# அன்னைக்கு

மு. வரதராசனார்

அன்புள்ள அம்மா,

உன் கடிதம் வந்ததும் எனக்கு ஒருவகை ஆறுதல் ஏற்பட்டது. அத்தையைப்பற்றியும் தமக்கையைப்பற்றியும் எழுதியிருந்த செய்திகளால் ஆறுதல் ஏற்படவில்லை. தங்தையைப் பற்றியும் நண்பரைப்பற்றியும் எழுதியிருந்த எழுத்துக்களாலும் ஆறுதல் ஏற்படவில்லை. ஆனால், நீயும் உன் பொன்னான கையால் 'தமிழர்களுக்கும் எதிர்காலம் உண்டு' என்று எழுதிய மணிமொழிகளே எனக்கு ஆறுதல் அளித்தன.

'தமிழர்களுக்கும் எதிர்காலம் உண்டு' என்று எழுதி ஆறுதல் அளித்த நீ, அதற்குக் காட்டிய காரணந்தான் எதிர்பாராததாக உள்ளது. 'எல்லாரும் பங்கு கேட்கின்றார்கள். ஆந்திரர்களுக்கு ஆந்திரமாகாணம் கேட்பது ஒரு சமயக் கொள்கைபோல் ஆகிவிட்டது. வடநாட்டில் மற்றவர்களும் மாகாணப் பற்றும் மாகாணக் கடமையும் மேற்கொண்டு பங்கு உரிமை கொண்டாடுகின்றார்கள். ஆகையால் பங்குபோட்டுத் தமிழனைத் தனியே பிரித்துவிடும் நாள் வரப்போகின்றது. அப்போது தமிழன் புதுப்பாடம் கற்றுக் கொள்ளப் போகின்றான்' என்று எழுதியிருக்கின்றாய். எனக்கு ஒன்மற புதுமையாய்த் தோன்றிற்று. அப்படியானால், தமிழன் தானே விரும்பி ஏற்றுத் தன் குடும்பக் கடமையைச் செய்யப் போவதில்லையா? பிறர் கட்டாயத்தால் ஏற்பட்டபோதுதான், வேறு வழி இல்லையே என்று

தன்னைத்தான் காத்துக்கொள்ளத் துணிவானா? நன்றாயிருக் கின்றதே தமிழன்போக்கு!

எப்படியாவது போகட்டும். காலவெள்ளத்தில் நீந்திச் சென்றால் போதும். தமிழன் எப்படியாவது காலத்தை உணர்ந்து. மாறுதல்களை உணர்ந்து வாழ்ந்தால் போதும். காலம் அறிந்து இடம் அறிந்து சூழல் அறிந்து வாழத் தெரியாத காரணத்தால், அன்னப் பறவையின் இனம் ஏறக் குறைய அழிந்துவிட்டதாம்; யானையின் இனமும் அழிந்து கொண்டிருக்கின்றதாம். தமிழனும் அப்படிப்பட்ட கண் மூடி வாழ்வு வாழாமல் தன் வாழ்வை மாற்றி அமைத்துக் கொண்டால் போதும் அன்னம் போலவும் யானை போல வும் உயர்ந்த வாழ்வு வாழ்ந்து புலவரால் பாடப்பட்டால் போதுமா? அப்படி வாழ்ந்து அழிந்து போவதைவிட, எறும்புபோலவும் காக்கைபோலவும் அழியாவாழ்வு பெறு வதே நல்லது. எறும்பும் காக்கையும் எந்த இடத்திற்கும் காலத்திற்கும் சூழலுக்கும் ஏற்றபடி உண்டு வளர்ந்து வாழ வில்லையா? வாழ்க்கைப் போராட்டத்தில் யானையும் அன்ன மும் தோற்றுப்போக, எறும்பும் காக்கையும் வெற்றி பெற வில்லையா?

நான் நாட்டை நினைந்து வருந்தினேன். நீ வீட்டை உதாரணமாக எடுத்துக்காட்டியிருக்கின்றாய் என் பாட்ட னார் குடும்பத்தைப் பங்கிட்டுப் பிரிக்கக்கூடாது என்று நெடுங்காலம் தள்ளிவந்த கதையை நினைவுபடுத்தினாய். உண்மைதான் அம்மா! பாட்டனார் காலத்தில் எந்தப் பெரியவர்களுக்கும், அண்ணன் தம்பி என்றால் பங்கு கேட் கக்கூடாது, பிரியக்கூடாது, வாசற்படி இரண்டு ஆகக் கூடாது, அடுப்பங்கரை இரண்டுபடக்கூடாது என்றெல்

லாம் எண்ணம் தோன்றும். பாட்டன்மேல் குறை சொல்லிப் பயன் என்ன? அது அந்தக் காலத்துப் போக்கு. ஆனால் அவ்வாறு பாட்டனார் காலந்தள்ளியபோது, தந்தையும் சிற்றப்பன்மாரும் ஏன் வாய்மூடி அடங்கிக் கிடந்தார்கள்? இப்போது வீரம் பேசும் பங்காளிகள் அப்போது பங்கு வேண்டாம் என்று அமைதியாக இருந்தார்களா? இறுதியில் பாட்டனார் எண்ணம் பலிக்கவில்லை அல்லவா? அவர் வயிற்றில் பிறந்தவர்கள் அடிபட்டு உதைபட்டு அல்லல்பட்டுத் தெருவில் நின்றபோது, அதே பாட்டனார் கண்ணீர்விட்டுக்கொண்டே பங்கு போட்டுத் தரவில்லையா? அதுபோலவே நாடும் தக்க முறையில் பிரிக்கப்பட்டுத் தனியே உரிமையும் பெற்றுவிடும்.

ஆனால், ஒரு பாட்டனார் செயலால் நம் குடும்பத்திற்கும் பங்காளிக் குடும்பங்களுக்கும் மனக்கசப்பு மாறவில்லை. அதுபோல் சில அரசியல் பாட்டன்மாரின் கொள்கைகளால் இந்தியாவின் உட்பிரிவான நாடுகளுக்குள் கசப்பு நீடிக்குமே என்பதை நினைக்கும்போது வருத்தமாகவே இருக்கின்றது.

அம்மா! உன் கடிதத்தில் "பாட்டனாரின் உயர்ந்த நோக்கத்தைக் காப்பாற்ற முயன்றதால், குடும்பம் கலகலக்க நேர்ந்தது'' என்று எழுதியிருக்கின்றாய். அதில் உயர்ந்த நோக்கம் என்று நீ குறித்தது உண்மையான கருத்தா? அல்லது எள்ளும் குறிப்பா? தெரியவில்லை. என்னைக் கேட்டால் என்னால் சொல்லமுடியாது. ஆனால், உண்மையாகவே அது உயர்ந்த நோக்கம் என்று கொண்டாலும், பாகம் பங்கிடாமல் அண்ணன் தம்பிகள் நரைத்து மூத்துக் கிழவர்கள் ஆவது உயர்ந்த நோக்கம் என்றே கொண்டாலும்,

மனிதர்கள் அப்படி வாழக்கூடாது என்றே எண்ணு கின்றேன்.

உயர்ந்த நோக்கம், உயர்ந்த நோக்கம் என்று சொல்லி வாழ்க்கையைக் கெடுத்துக்கொள்ளுவோர் பலர் இருக்கின் றார்கள். அவர்களில் என் பாட்டனாரும் ஒருவர். இன் றுள்ள அரசியல் பாட்டன்மாரும் அவர்களில் சேர வேண் டியவர்களே.

நோக்கமும் கொள்கையும் மக்கள் வாழ்க்கைக்காக— மக்களுக்காக ஏற்பட்டவைகளே. மதமும் மொழியும் அப்படியே மக்களின் நன்மைக்காக ஏற்பட்டவைகளே. ஆனால், இன்று இந்தியா முழுதும் நான் காணும் காட்சி மதத்துக்காக, மொழிக்காக, நோக்கத்துக்காக, கொள்கைக் காக என்று இப்படிப்பட்ட காரணங்களுக்காக, மக்கள் சாகின்றார்கள்; வதைகின்றார்கள்; அஞ்சுகின்றார்கள்; அலை கின்றார்கள்.

பட்டுப்பூச்சி தானே நூல் உண்டாக்கித் தன்னையே சுற்றிக்கொண்டு தானே ஏற்படுத்திய அந்த வலைக்குள் தானே கிடந்து வருந்துகின்றது அல்லவா? மனிதனும் அப் படியே தன் மூளைகொண்டு தானே ஏற்படுத்திக்கொள் கின்ற கொள்கை வலைக்குள் தானே அகப்பட்டு அழிகின் றான். இன்று கிழக்கு வங்காளத்தில் மக்கள் படும் தொல் லைக்குக் காரணம் என்ன? பூனைகளோ அல்லது யானைகளோ மகாநாடு கூடி மக்களைக் கெடுக்கச் செய்த சூழ்ச்சியா இது? அல்லது கழுகுகளும் புழுக்களும் பிணங்கள் போதாத குறையை உணர்ந்து, பிணங்களைப் பெருக்குவதற்காக ஏற் படுத்திய இயக்கங்களின் விளைவா இது? எந்த விலங்கும் எந்தப் பறவையும் எத்தகைய சூழ்ச்சியும் செய்து மனித

லேக் கெடுக்க முயலவில்லை. மனிதன் மூளையில் தோன்றிய சில தவறான எண்ணங்களுக்கு மனிதன் அடிமையாகி அழிந்துபோகின்றான். வாழ்வுக்காகக் கண்டான் கொள்கைகளை. நாளடைவில் கொள்கைகளுக்காக வாழ்வைப் பலிகொடுக்கின்றான்.

என் பாட்டனாரும் இதைத்தான் செய்து வந்தார். குடும்பம் அதனால் கெடுவதாகத் தெரிந்தபோது திருந்திப் பங்குகொடுத்துப் பிரித்து மக்களை உரிமை உள்ளவராக்கி வாழவைத்தார். ஆனால் அதை முன்னமே செய்திருந்தால், பங்காளிக் கசப்புக்கு இடம் இருந்திருக்காது. நம் அரசியல் பாட்டன்மாரும் இந்தப் போக்கில் இப்போது உணரமாட்டார்களா? நெடுங்காலமாக "இந்தியா ஒருநாடு" என்று திருப்பித் திருப்பிச் சொல்லிவந்தார்கள். அந்தப் பேச்சு அசையாக் கொள்கையாயிற்று; மதம் ஆயிற்று; எதிர்க்கட்சிகளை வளர்த்தது; எதிர்பாராத தொல்லைகளை உண்டாக்கியது. ஒன்றும் அறியாத பாமரமக்கள் படமுடியாத துன்பங்களைப் பட்டு வருகின்றார்கள். உயர்ந்த நோக்கந்தான்; ஆனால் ஓயாத் தொல்லையாக மூண்டது காரணம் இல்லாமல் ஏழைமக்கள் துன்பங்களுக்கு ஆளானார்கள்; இதைக் கண்ட தலைவர்கள் நெஞ்சம் கலங்கிவருகின்றது. மெல்ல மெல்ல உண்மை உணர்ந்து உதவப் போகின்றார்கள். கொள்கையை விட, உயர்ந்த நோக்கத்தைவிட, பொதுமக்களின் உயிர் வாழ்க்கை விலையுயர்ந்தது என்பதைத் தெளியப் போகின்றார்கள். அப்போது "இந்தியா என்பது பல நாடுகள் சேர்ந்த ஒரு உபகண்டம்" என்று உணர்ந்து நமக்குப் உணர்த்தப் போகின்றார்கள்.

மனிதன் குறை உடையவன் மட்டும் அல்ல; குறை காண்பவனும் அவனே. பிறர் குறையைக் காண்பவன்

அரைமனிதன். தன் குறையை உணர்பவன் முழு மனிதன். அரசியலிலும் முழு மனிதர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் சிக்குண்ட வலையை அறுத்து வெளிவருவார்கள்.

இப்படியே மனிதன் பல துறையிலும் தான் ஏற்படுத்திச் சிக்குண்ட வலையைத் தானே தகர்த்து அழித்து முன்னேறி வந்திருக்கின்றான். இன்று அரசியல் துறையில் பல வலைகளைப் பின்னி அமைத்துக்கொண்டு அல்லல்படுகின்றான். கட்சிகளை அமைத்துவிட்டு அந்தக் கட்சிகளுக்காகத் தாங்கள் வாழவேண்டும் என்று மக்கள் தவறாக எண்ணுகின்றார்கள். கட்சிகளால் நாட்டில் தொல்லை பெருகக் கண்டு கண்டு, "கட்சிகள் நம் ஒற்றுமையான நல் வாழ்வைக் கெடுக்குமானால், நம்மைப் பாழ்படுத்துமானால், அந்தக் கட்சிகளை அழிப்போம்; கட்சிகளுக்காக மக்கள் பலியாகக் கூடாது. மக்களுக்காகக் கட்சிகள் பலியாகட்டும்'' என்று உணரும்நாள் வாராதா? என் பாட்டனாருக்குக் குடும்பச் சிக்கலில் வந்த அறிவு, தலைவர்களுக்கு அரசியல் சிக்கலில் வாராதா?

அம்மா! நல்ல உதாரணம் எடுத்து எழுதினாய். பாட்டனார் கதை எனக்கு மட்டுமல்ல, உலகத்துக்கே நல்ல பாடம் என்று உணர்கின்றேன். உன் எளிய எழுத்து அன்பை மட்டும் அல்லாமல், அறிவையும் வளர்க்கும் என் பதைக் கண்டுகொண்டேன்.

அன்புள்ள மகன்,
எழில்.

<u>பிற்குறிப்பு</u>

அம்மா! கடிதத்தை முடித்தபிறகு ஒரு செய்தியை நினைத்துக்கொண்டு நானே சிரித்தேன். அதையும் இங்கே

எழுதி விடுகின்றேன். அதாவது: இந்த விடுதியில் தங்கியுள்ள மாணவர் ஒருவர் தேள் பாம்பு முதலியவற்றையும் கொல்லாத விரதம் உடையவர். நான்கு நாட்களுக்கு முன் அவருடைய அறையில் ஒரு தேள் எப்படியோ வந்து விட்டது. அவரோ அதை அடிக்கவில்லை; அகற்றவும் இல்லை. எங்காவது கொண்டுபோய விட்டுவிட்டால், அங்கே அதை ஏதாவது கொன்று விடுமே என்று கவலைப்பட்டார். அந்த அறையைப் பூட்டிவிட்டு வேறிடத்துக்குப் போய்விட்டார். அன்று நள்ளிரவில் அலறும் குரல் கேட்டு அந்த இடத்திற்கு ஓடிப்போய்ப் பார்த்தேன். பக்கத்து அறையில் இருந்த நண்பரின் படுக்கையில் தேள் வந்து அவரைக் கொட்டிவிட்டதாம். அவருக்கோ குளிர்ச்சியான உடம்பாம்; படாத பாடு பட்டார், பாவம். ஒருவருடைய உயர்ந்த கொள்கை மற்றவருக்கு வேதனையாயிற்று.

---

# சில்லறையும் மொத்தமும்

போ குருசாமி.

நாணயக்காரப் பிள்ளை என்ற பெயரில் வழங்கப் பெறும் சிறப்பு நெல்லை நகரில் ஒருவருக்குத்தான் கிடைத்தது. மளிகைக்கடை வைத்து நிறையப் பொருள் சேர்த்து விட்டார். எப்படியோ அவருக்கு நாணயக்காரப் பிள்ளை என்று பெயர் தோன்றி விட்டது. அவருடைய இயற் பெயர் என்ன என்பது அயலூரானுகிய எனக்குத் தெரிய வில்லை. எனக்கு மட்டுந்தான் தெரிய வில்லை என்பதில்லை. எத்தனையோ பேருக்கு அவருடைய உண்மைப் பெயர் தெரியாது.

உண்மைப் பெயர் தெரியா விட்டால் என்ன? நாமும் அவரை நாணயக்காரப் பிள்ளை என்றே வழங்குவோமே. அதனுல் ஒன்றும் குடி முழுகிப் போகாது.

வீரராகவபுரத்தில்தான் நாணயக்காரப் பிள்ளை கடை வைத்திருக்கிருர். வண்ணூர் பேட்டையில் வீடு. நடுப்பகல் உணவுக்காக வீட்டுக்கு வருவார். சாலை வழியாக வருகிற வழக்கம் இல்லை. வீரராகவ புரத்துக்கும் வண்ணூர் பேட்டைக்கும் நடுவே தண்பொருநை ஆறுதான். நாணயக்காரப் பிள்ளையைப் போன்றவர்களுக்கு நல்லது செய்ய வேண்டு மென்று எண்ணித்தானே என்னவோ, அந்தத் தமிழ் ஆற்றில் பெரும்பாலும் சிறிதளவே தண்ணீர் ஓடும். நாண யக்காரப் பிள்ளை சிந்துபூந்துறை வந்து, ஆற்றுவழியாக வண்ணூர்பேட்டை அடைவது வழக்கம். எப்போதாவது மழை பெய்து ஆற்றில் தண்ணீர் நிறைந்து வந்தால்,

"இந்தப் படுபாவி பயல்கள் நிறைந்த ஊரிலே மழை வேறு கேடா?" என்று "திருவாய் மொழி" பாடிக்கொண்டே சாலை வழியாக நடந்து 'தொலைப்பார்.' ஆனால், ஆள் இறங்க முடியாது என்ற நிலை எப்போதாவதுதான் ஏற்படும்.

பொழுது விடிவதற்கும் மறைவதற்கும் நாள் தோறும் யாராவது கட்டளை இடுகிறார்களா? இயற்கை நியதி தன்பாட்டில் இயங்குகிறது. இந்த இயற்கை நியதிக்கும் நமது நாணயக்காரப் பிள்ளையின் வாழ்க்கை நியதிக்கும் மிகவும் ஒற்றுமை. கிழக்கு வெளுக்கு முன் எழுந்து விடுவார். குட்டக் துறையில் குளிப்பார்; பேராச்சி கோயிலை வலம் வந்து அவள் பொருமையைச் சோதிப்பார். பிறகு வீட்டில் 'பழையது விருந்து'. அடுத்த வேலை 'கடை திறப்பு'. ஆற்று வழிதான் அவருக்கு எப்போதும் ஏற்பட்ட வழி. கடையில் அவர் அமர்ந்திருப்பதைப் பார்த்தால் திருநீற்றுப் பொலிவே ஓர் உருவம் பெற்று அமர்ந்திருக்கிறதோ என்று தான் எண்ணத் தோன்றும்:—சிலருடைய 'தயவை' நாடி அவர் செலவழிக்கிற பணத்தை மறந்து விட்டால், திருநீற்றுக்கெனச் செலவிடுவதுதான் 'பிள்ளை' வாளுக்குப் பெரிய செலவு. இந்த இரண்டு செலவினமுந்தான் அவருடைய வாணிக 'இரகசியங்கள்'—நடுப்பகல் உணவுக்காக வீட்டுக்கு வருவார். வரும்போதும் போகும் போதும் பேராச்சியை விடமாட்டார்.

ஆறு, வீடு, கடை,—ஆறு, வீடு, கடை—இதுதான் அவர் நியதி; நிலைத்த நியதி. இந்த நியதிக்கிடையே சிக்கி மூச்சுத் திணறித் திண்டாடும் நிலை பேராச்சிக்குத்தான். இயற்கை நியதியில் அவ்வப்போது 'கிரகணங்கள்' ஏற்படுவதுப் போலப் 'பிள்ளை' வாளும் மேலதிகாரிகளைக் 'கைக்குள்

போட்'ப் போவார். மற்றபடி ஒரே ஒழுங்குதான் பொழுது விடிவதும் சாய்வதும் நிலைமாறினால் இவர் நியதியும் ஒரு வேளை மாறலாம்

ஒரு திங்கட்கிழமை வழக்கம் போலச் சாப்பாட்டுக்காக நா....பிள்ளை வீடு நோக்கி வந்துக் கொண்டிருந்தார். பேராச்சி கோயிலுக்குப் பக்கம் ஆற்று நடுவில் முருகன் கோயில் ஒன்று இருக்கிறது. அதன் முன் ஒரு சிறு கூட்டம்; கூட்டம் சிறிதானாலும் ஒலி பெருகித்தான் இருந்தது. எல்லோரும் என்னென்னவோ பேசிக்கொண்டிருந்தார்கள். ஒருவர் சொன்னதை மற்றவர் கேட்கவில்லை; எல்லோருமே பேசினார்களே தவிரக் கேட்கவில்லை.

அது என்ன கூட்டமென்று அறிய வேண்டுமென்று நம் பிள்ளைவாளுக்குக் கூட ஓர் ஆசை எழுந்து விட்டது. அதாவது, ஒரு வால் நட்சத்திரம் வானில் புதிதாகத் தோன்றி விட்டது என்றுதான் எண்ண வேண்டும். நியதி பிறழ்கிறது...............

"என்ன தம்பி, அங்கே ஏன் கூட்டம் கூடி'ருக்கு? ஏதாவது கிழடு ஆத்திலே வாயைப் பிளந்திருச்சா?"

என்று பக்கத்தில் சென்ற ஒருவரிடம் நா. பிள்ளை கேட்டார்.

"அதெல்லாம் ஒண்ணுமில்லை ஒரு 'பொடிப் பய' துட்டைக் களவாண்டுக்கிட்டானாம். புடிச்சிக் கிட்டாக. போலீசுக்காரரும் வந்தாச்சி பய' மெத்தத் துணிச்சல் காரன்தான். வாயைத் தெறப்பனாங்கான்."

பிணங் கிடக்கும் இடத்தை யாரும் சொல்லாமலே தெரிந்துக் கொள்ளக் கூடிய வல்லமை பருந்துகளுக்கு

உண்டல்லவா? அது போலத்தான் போலீசுக்காரர் நிலையும். இங்கே ஒரு சிறுவன் காசு திருடி விட்டான் என்பது எப்படித்தான் தெரிந்ததோ? கண் இமைக்கு முன் இரண்டு பேர் வந்து விட்டார்கள். மூக்கு வியர்த்ததோ என்னவோ!

பையனுக்குப் பத்து வயது இருக்கும். களையான முகந்தான் வயிறுதான் ஒட்டிக் கிடந்தது. கண் பெரிய கண், ஆனால் ஒளியிழந்த கண். வருத்தம் அவனை விழுங்கி யிருப்பது தெரிகிறது என்றாலும் ஒரு சொட்டுக் கண்ணீர் வர வேண்டுமே.......................! கிடையாது. அவன் இடுப்பில் இருந்த ஒரே வேட்டி இப்போது அவனுக்கு விலங்காக மாறிவிட்டிருந்தது, மானம் காக்கத் திருடினான்; மானம் பறந்து விட்டது. இனி வேட்டி எதற்கு? மானங் கெட்ட சமூகத்தின் சாபக் கேடாக அவன் அங்கே நின்றான். நாகரிக சமூகத்தினை எள்ளி நகையாடவே ஏற்பட்ட படைப்பாக அவன் அங்கே நின்றான். படித்து வளர்ந்து சமூகத்தில் பெரிய மனிதனாய் வாழ வேண்டிய அவன் மானம் இழந்து, ஆடை இழந்து—ஏன் அனைத்தும் இழந்து—அங்கே நின்றான். தண்பொருநை இந்த மானக் கேட்டைக் காண நாணி, ஒதுங்கி வளைந்து மௌனமாகச் சென்று கொண்டிருந்தது. நெகிழ்ந்த மனம் சமூக வாழ்வுக்குச் சரியன்று என்று சொல்வதைப்போல ஆற்றை ஒட்டிப் பாறைகள்—திண்ணென்று கரடு முரடாயிருந்த பாறைகள் இருந்தன. அத்தகைய ஒரு பாறை மீதுதான் சமூகத்தின் மானக்கேடு—சாபக்கேடு—நாடகமாக நடந்து கொண்டிருந்தது.

எல்லோரும் என்னென்னவோ பேசினார்கள். போலீசுக்காரர்களின் வெருட்டொலி ஓங்கிக்கொண்டே போயிற்று.

ஒலி செயலாய் மாறிற்று. அடி, உதை என்ற வடிவில் போலீசாரின் அதிகாரம் அங்கே நடனமாடிற்று. ஆனால் இந்த ஆரவாரங்க ளெல்லாம் அந்தச் 'சின்னப் பயலை' ஒன்றும் செய்து விடவில்லை. வறண்டு கிடந்த அவன் கண்ணிலிருந்து ஓர் சொட்டு கண்ணீர் கூட வரவில்லை. வாய் திறந்து பேசவோ—இல்லவே இல்லை. சிறுவன் வன்கண்மையின் வடிவமாக அங்கே நின்று கொண்டிருந்தான். சமூகத்தின் கேலிப் பிழைப்பைக் கேலி செய்வது போல் அங்கே அசைவற்று நின்று கொண்டிருந்தான்.

ஆற்றில் குளிக்கப்போன ஒருவர் படிக்கட்டில் நான்கணுக் காசை வைத்து விட்டுப் போனாராம். அதை அவன் எடுத்திருக்கிறான். பார்த்து விட்டார்கள்.—பிறகு ஆரவாரங்களும் சடங்குகளும் ஒன்றன் பின் ஒன்றாய் வந்து விட்டன.....இவ்வளவுதான் நடந்த நிகழ்ச்சி.

நாணயக்காரப் பிள்ளை பையனைப் பார்த்தார். நல்ல வேளையாக அவரும் ஒரு போலீசுக்காரராக இல்லை. அப்படியானால் பாறைதான் அம்மி; பையன் துவையல் தான்

> "காலம் கெட்டுப் போச்சு. பிடிச்ச பிடிக்குப் பதில் சொல்லத் தெரியாத இந்தப் பொடியனுக்கு வந்த துணிச்சலைப் பார்த்தியளா? காசை எங்கெதான் வைச்சிருப்பான்? சொன்னானா இல்லையா? முழிக்கிற முழியைப் பாரு, ஆந்தை மாதிரி. பிள்ளையைப் பெத்து விட்டானே அவனைச் சொல்லணும், பயல் என்ன பண்ணுவான்?"

—இது பிள்ளை'வாள் சொற்பொழிவு. பக்கத்திலிருந்தவர் ஒருவர் சொன்னார்:

"என்னவே, ஊரிலே எத்தனையோ பேரு மொத்த மொத்தமாக் கொள்ளை யடிக்கலையா? அதெல்லாம் மரியாதைக் கொள்ளை. அவுக செய்றதுக்கெல்லாம் என்னென்னமோ பேரு! இந்தப் பய' செய்ததுமட்டுந்தான் களவா? பாவம், பச்சை மதலை, எத்தனைநாள் பட்டினியோ, என்ன சங்கடமோ இந்த நாலணாவை வெச்சு என்னென்ன செய்ய நினைச்சானோ! அவன் தலைவிதி ஆப்பிட்டுக் கிட்டான். ஊரே இப்பிடித்தான். அண்ணாச்சி, போலீசுக்காரரே, உங்களைத்தானே! வயித்துக்கில்லாத கொடுமையிலே களவாண்டிருப்பான். பயலை போகச் சொல்லுங்க'

—இது ஒருவர் பரிவுரை. என்ன........! சிறுவன் கண்ணில் ஒரு சொட்டுக் கண்ணீர்........! அது வந்தே விட்டது! இரக்கமும் இந்த உலகத்தில் உண்டா!

"எலே, மூதி, என்னலெ அழுதுக்கிடுதியே அழுகை வேறயா? சீ, மூதி எங்கெ லெ காசை வச்சே"

—இப்படியாக நாடகம் நடந்துகொண்டிருந்தது. இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருக்க நம் பிள்ளைவா'ளுக்கு முடியுமா?

"அடி உதவுகிற மாதிரி அண்ணன் தம்பிகூட உதவமாட்டான். பயலைச் சக்கையாப் போட்டு நாலு அறை வச்சாத்தானே கக்குவான். அடிமேலே அடி வைத்தால் அம்மியும் நகரும்"

என்று மேற்கோள்களுடன் முடிவுரை கூறிவிட்டு நடந்தார்.

போராச்சி கோயிலை வலம் வராமல் போகலாமா? "அம்மா, போராச்சி! நாளை செவ்வாய்க்கிழமை. நாலு தேங்காய் விடலை எறிகிறேன். அந்தக் காரியம் மட்டும்...." என்று எதற்கோ நேர்ந்துவிட்டு வீட்டுக்கு வந்தார்.

அங்கே.....................?

பிள்ளையவர்களை வரவேற்க 'வாரண்டு' காத்திருந்தது.

என்னவோ கள்ள வியாபாரமாமே.................!

மறுநாள், செவ்வாய்க்கிழமை. போராச்சிக்கு நான்கு தேங்காய் நஷ்டம்.

---

DEMAND

PRABHAT INK

High Grade

for Fountain Pens

AVAILABLE FROM

PRABHAT TRADERS

Stationers General Merchants, Importers & Exporters

4 & 5, Badrian Street, G. T., Madras.

*Tele* :—PRABAKAR, Madras.

*Branches at* :

KUMBAKONAM, TINNEVELLY.

# மணிமேகலை—II

தே. போ. மீனாட்சிசுந்தரனார்

"மணிமேகலை" என்ற அறவடிவமான இலக்கியத் தலைவி, மணிமேகலா தெய்வத்தின் பெயராலேயே விளங்குகின்றாள். கோவலன் மாதவியின் வீட்டிலே காமத்தில் கண் மூடிய கீழ்மகனாகக் கிடந்தானோ எனப் பலர் கருதலாம் எனச் சிலப்பதிகாரம் பாடிய இளங்கோவடிகட்குத் தோன்றுகிறது. தம்முடைய காப்பியத் தலைமகனது சிறப்பியல்புகளை நம் கண்ணெதிரே காட்ட விரைகின்றார். கோவலனுடைய செல்வம் காமக்களியாட்டத்தில் செலவாகவில்லை. உற்றாரின் நீங்கி வருந்தும் மக்கட்கும், கல்வியின் நுட்பத்தைத் துய்ப்பதற்கும், அறக்கொடியோரை நல்வழிப் படுத்த முந்தி அவர்களுக்காகத் தன் உயிரையும் கொடுத்துத தாயின் கண்ணீரைத் துடைக்கத் துடித்து எல்லோரையும் இன்பவழியில் உய்ப்பதற்குமே செலவாகிறது. அங்கொரு காட்சி நம் கண்ணெதிரே தோன்றுகிறது. "மாதவியின் வளமிகுந்த கலைக்கோயில்"; அங்கொரு திருவிழா. ஆம், மாதவிக்கு ஒரு செல்வக்குழவியாம் பெண் மகள் பிறந்துள்ளாள். பரத்தையர் இல்லம் என்றே தோன்றவில்லை. அறத்திலும் கல்வியிலும் ஆண்டிலும் பெரியோர் வருகின்றனர். யானையின் அடியில் இடறி விழக் கிடப்போரை யானைமேற் பாய்ந்து அடக்கி, யானைக்கும் இடையூறின்றிக் கிழவர்க்கும் இடையூறின்றிக் காக்கின்றான் கோவலன்; கருணை மறவன். குலமுறையை மறக்கின்றானோ? இல்லை. அவனுக்குத் தன் குல முதல்வன் ஒருவன் கடலில் கப்பலில் போனபோது புயற் காற்றால் சிக்கிக் கப்பல் சிதைய நின்றதைக் காப்பாற்றிய தெய்வத்தின் நினைவு வருகின்றது. அந்தத் தெய்வத்தின் பெயரையே தன் இளங்குழவிக்குச் சூட்டி மன மகிழ்கின்றான். குல மரபினை மறவாதுபோற்றும் அறக்கிழவோனாகவே கோவலன்

விளங்குகின்றான். இதனை உலகம் அறியும் என மாடலன் என்ற மறையவன் வழியாக இளங்கோவடிகள் அறிவிக்கின்றார். கோவலன் நினைவிற்குவந்த தெய்வமே மணிமேகலா தெய்வம். காலஞ் சென்ற திரு. வே. சாமிநாத ஐயர் இத்தெய்வத்தினைப்பற்றி அறியலாவனவற்றை ஒரு சிறு குறிப்பில் தந்துள்ளார்.

"சில தீவிலுள்ளவரை, அரக்கர் வாதைபண்ணுதபடி இந்திரனேவலால் பாதுகாத்துக் கொண்டிருத்தலையுடைய ஒரு தெய்வம், கோவலன் தன் குலத்தானொருவனை இத்தெய்வம் கடலிற் பாதுகாத்த நன்றி பாராட்டியே தன் புதல்விக்கு மணிமேகலை என்று பெயரிட்டான். மணிமேகலையை நல்வழிப்படுத்தற்கு எண்ணி அவளை உவவனத்திருந்து மணிபல்லவம் கொண்டுசென்று புத்த பீடிகைக் காட்சியிற் பழம் பிறப்பு உணர்வித்துப் பூர்வ ஜன்ம நாயகன் இன்னான் என்பதைத் தெரிவித்ததன்றி, சிறந்த மூன்று மந்திரங்களைப் பின்பு அவளுக்கு உபதேசித்தது"—இவ்வளவே அந்தக் குறிப்பு. புத்த சாதகக் கதைகள், இந்தத் தெய்வம் இந்தியாவிற்குக் கிழக்கேயுள்ள கடலில் காவலாக அமைந்தது என விளக்குகின்றன.

நம் நாட்டிற்குக் கிழக்கேயுள்ள தீவுகளோடு நம்மவர் தொடர்புகொண்டிருந்தனர். "திரைகடலோடியும் திரவியம் தேடு" என்பதும் நெடுங்கணக்கினை ஓதும் போதே தமிழ்க் குழவி உருப்போடும் மந்திரம். கப்பலோட்டிய தமிழன் எனத் திரு. சிதம்பரம் பிள்ளையைப்பற்றித் திரு. சிவஞான கிராமணியும் ஒரு நூல் எழுதியுள்ளார். கப்பலோட்டியவன் தமிழன் தான். மேலைநாட்டில் கப்பலோட்டிய போனீஷயர் தமிழரோடு உறவு கொண்டவர் எனப் பலர் கருதுகின்றனர். எகிப்து நாட்டுப் பட்டைக்கோபுரங்களினுள்ளே மலையாள நாட்டுத் தேக்குமரம் விளங்குகிறதென்றால் தமிழன் அங்குச் சென்றது தெளிவாகவில்லையா?

அவ்வாறே கிழக்கிந்தியத் தீவுகளுக்கும் கப்பலில் போய்வந்தவன் தமிழன்; கப்பற் படையிற் சிறந்து விளங்

கியது தமிழ் நாடு. பல்லவர்களின் கப்பற் படை கிழக்கிந்தியத் தீவுகளை வென்றது. "கடல்சூழ்ந்த உலகமெல்லாம் காக்கின்ற பெருமான், கழற்சிங்கன் அடியார்தம் அடியார்க்கும் அடியேன்" எனக்கழற்சிங்கன் என்ற பல்லவன் காலத்திருந்த சுந்தரமூர்த்திகள் பாடுகின்றார் அன்றோ? சோழர் கப்பற்படை இந்தக் கடலைத் தனதாக்கிக் கடாரமும் பல தீவும் ஆண்ட வரலாறு இப்போதுதான் விளங்கி வருகிறது. தமிழ்க் கல்வெட்டுகள் அங்கிருந்து கிடைக்கின்றன. பின்னர் விஜயநகரத்தரசர்கள் அக் கப்பலாட்சியைச் செலுத்தினர். மேற்குக் கடலில் அரபியர் வந்து மலையாள நாட்டிலும் கீழைக் கரையிலும் தங்கித் தமிழரொடு தமிழராய்ப் பின் சிறந்த மாலுமிகளாய் ஓங்கிப் போர்த்துக்கேசியரை அலைக் கழித்த வரலாற்றை நம்மவர் இன்றும் நன்கு அறியவில்லை. இன்று மறுமுறையும் கப்பற் படைகளும் நம் எதிரே எழுகின்ற காட்சியைக் காண்கின்றோம்.

கிழக்கிந்தியத் தீவுகளும் இப்போது நம்முடன் பேருறவு கொள்கின்றன. தங்கள் அரிசியை நமக்கு அனுப்ப முந்துகின்றன. அவை உரிமை பெற நாமும் உழைக்க முந்துகின்றோம். பழமை அடியோடு அழியாதன்றோ? இந்தியா முன்னே கிழக்கே தோன்றிய செங்கதிரோனாக விளங்கியது. புத்தர் பெருமான் அன்பு இங்கிருந்துதான் சுடர்விட்டு எங்கும் பரவியது. சீனரும் பிற கீழை நாட்டவரும் இந்தியாவைத் தமது அறிவுக் கோயிலாகப் பாராட்டினர். பல அறிஞர்கள் இங்கு வந்து போவது வழக்கமாய் இருந்தது. இன்றும் கிழக்கிந்தியக் கலைக் கோயில் ஒன்று தோன்றிவருகிறது. ஆசியமக்க ளனைவரும் ஒருங்கு திரண்டு ஒரு குடும்பமாக வாழப்போகின்றனர். அதனை மணிமேகலைக் கோயில் எனவும் வழங்கலாம் அன்றோ?

கிழக்கிந்தியத் தீவுகளின் இன்றைய நிலை வருத்தத்திற்கே விளைநிலமாகி உள்ளது. ஆனால் உலக வளத்திற்கே அவை விளைநிலம் என்ற உண்மையை மேலைநாட்டு வல்லரசு

கள் உணர்ந்துள்ளமையாலே இந்த இக்கட்டெல்லாம் வந்துள்ளன. இயற்கைப் புதையலாக இருப்பதனாலேயே போராட்ட வேராகவும் அவை மாறக் காண்கின்றோம். உலகிற்கு இன்றியமையாதுள்ள மண்ணெண்ணெய், மரப்பால் (ரப்பர்) வெள்ளைச்செம்பு (நிக்கல்) முதலிய பல பொருள்களின் தாயகம் கிழக்கிந்தியத் தீவுகளேயாம். ஆதலின் ஆங்கிலேயரும் உலாந்தியரும் அமெரிக்கரும் ஜப்பானியரும் அவற்றைத் தத்தம் கைக்குள் சிக்கவைக்க முயலுவது புதுமையன்று. இந்த ஆசியப் புதையல் ஆசியரின் முன்னேற்றத்திற்கே இனிப் பயன்படும். அப்போது தான் பிறரை அடிமையாக்கும் வெறி ஒழியும்.

தமிழ் மக்களுக்கும் கிழக்கிந்தியத் தீவினருக்கும் உள்ள தொடர்பு, மிக மிகப் பழைய தொடர்பு. ஹங்கேரி நாட்டிலிருப்பவர்க்கும் நம் நாட்டில் வாழும் கோலருக்கும் கிழக்கிந்தியத் தீவில் வாழ்வோருக்கும் தொடர்புண்டு அவர்கள் ஒரே மரபினராம். ஒரே வகையான மொழிகளைப் பேசுகின்றனராம். தமிழ் மொழியிலும், அவர்கள் வழக்குப் பழங்காலந் தொடங்கிப் புகுந்துள்ளது, அவர்கள் மொழியின் சிறப்பியல்பு முந்து நிலைகளை வழங்குவதேயாம். அதாவது அவர்கள் சொல்லின் முதலெழுத்தை மாற்றுவதாலேயே பொருள் மாறுபடும். தமிழிலேயோ பிந்து நிலைகளாகப் பகுதிக்குப் பின்னேவரும் இடைநிலை, விகுதி முதலியவற்றை மாற்றினால்தான் பொருள் மாறும். வருகின்றான் என்பதில் பின்வரும் இடைநிலையை மாற்றினால் வருவான் எனப் பொருள் மாறும், விகுதியை மாற்றினால் வருகின்றாள் எனப் பொருள் மாறும்; ஆனால் கிழக்கிந்தியத் தீவினர் வழக்கும் நம் பழந் தமிழ் வழக்கில் காணக்கிடக்கின்றது. "ஆய்" என்றால் தாய் என்று பொருள். சங்ககாலத்தில் ஓர் அரிய வழக்கிருந்ததெனக் குறுந் தொகைப் பாட்டொன்று சொல்லுகிறது. "யாய்" என யகரத்தை முந்து நிலையாகச் சேர்த்தால் "என்னுடைய தாய்" என்று பொருளாம். "ஞாய்" என ஞகரத்தை

முந்து நிலையாகச் சேர்த்தால் "உன் தாய்" என்று பொருளாம்; 'தாய்' எனத் தகரத்தை முந்து நிலையாகச் சேர்த்தால் "அவனுடைய தாய்" என்று பொருளாம். இது தான் கோலர் மொழியின் வழக்கு. "நான்" "நீ" என்பவற்றைக் குறிக்கும் சொற்கள் மிகமிகப் பழையனவாகும். அப்படிப்பட்ட பழைய சொற்களிலும் கோலர் வழக்குப் புகுந்துள்ளது என்றால் கிழக்கிந்தியத் தீவினரோடு நமக்குள்ள தொடர்பு எவ்வளவு பழையது என்று எண்ண முடியுமா? கோலர் நம்மோடு உடன் வாழ்ந்து அங்குப் போயினர் போலும்; நாமும் அங்குப் போய் வாழ்ந்து வந்தோம் போலும். நிற்க. மற்றொரு வழக்கும் இன்று வரை வழங்குகிறது. 'வீடு கிடு' 'தலை கிலை' 'வயல் கியல்'—இந்த வழக்கானது தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம்என்ற எல்லாத் தென்னிந்திய மொழிகளிலும் வழங்கக் காண்கிறோம். முதலெழுத்துக்குப் பதிலாக "கி" என்பதனை முந்து நிலையாக அமைப்பது கோலர் மொழி வழக்கை நினைப்பூட்டவில்லையா? தவளை, வழுதுளைமுதலிய சொற்கள் அவர்கள் மொழியிலிருந்து நம் மொழியில் குடியேறினவையாம். "இளநீர்" என்றால் பொருள் என்னை? 'நீர்' என்றால் அம்மொழியில் தேங்காய் என்பது பொருள்: இதற்கு 'இளம்' என்ற அடைகொடுப்பது பொருத்தந்தானே; தமிழுடையும், கிழக்கிந்தியப் பெயரும் ஒரு சொற்றொடராக இயைந்த இயைபே இந்த இரு நாகரிகத்தின் ஒற்றுமையை விளக்குகிறது.

தமிழர் கோலர் மொழியைத் தமதாக்கிக் கொண்டது பெரிய வியப்போ? இன்றும் பிறமொழிகளைத் தமிழர்போலப் பேசுவோர் உண்டோ? காலம் சென்ற சீநிவாச சாத்திரியார் பேசிய ஆங்கிலத்தினைக் கண்டு ஆங்கிலேயரும் வியந்தனர். இவ்வாறு பிறர் மொழியைத் தமிழர் கற்றுவந்த வரலாற்றை மணிமேகலை என்ற பாட்டும் பாடுகிறது. ஆதிரை பிச்சையிட்ட காதை இலக்கியச் சுவை நிரம்பியது. தமிழன் கீழ் நிலையில் உள்ள மக்களை உயர்த்திய மரபினை விளக்குவது

சாதுவன் கிழக்கிந்தியத் தீவுகளில் வழங்கும் மொழி களை நன்கு அறிந்தவன். அவன் ஏறிச் சென்ற கப்பல் உடைந்தது. ஒரு தீவின் கரையில் ஒதுக்கப் பெற்றான். மக்களுடம்பினையே விருந்தாக உண்ணும் அத்தீவினர் அவனைக்கண்டதும் நாவில் நீரூற நின்றனர். ஆனால் அவனோ அவர்களுடைய மொழியிற் பேசினான்; மனம் மாறிவிட்டது. பகைத்தெழுந்தவர்கள் தொழுதுரையாடினார்கள். சாத்தனார் இவ்வாறு மொழிவழியே எழும் வியத்தகு தொடர்பினை விளக்கிவைக்கின்றார். இந்த நுட்பம் தமிழனுக்கன்றோ தெரியும். அவனை அவர்கள் அரசனிடம் கொண்டு செல்கின்றார்கள். கள்ளுப்பானையும் புழுத்த புலாலும் சுற்றி இருக்கத் தன் மனையாளோடு கிடந்தான் அவர்கள் தலைவன். இதற்கு என்ன உவமை கூறலாம்? இலக்கிய நயம் சொட்டச் சொட்டச் சாத்தனார் பாடுவதனைக் கேட்கலாம்.

"கள்ளடு குழிசியும் கழிமுடை நாற்றமும்
வெள்ளென்பு உணங்கலும் விரவிய இருக்கையில்
எண்குதன் பிணவோடு இருந்தது போலப்
பெண்டுடன் இருந்த பெற்றி"

(குழிசி-பானை; கழி - மிக்க; முடை-புலால்; உணங்கல்-வற்றல்; எண்கு-கரடி; பிணவு-பெண்கரடி)

இத்தகைய கொடியோன் மனத்தையும் அன்புருவாகச் செய்தது, அவனுடைய தாய் மொழியைக் கேட்கும் இன்பம். 'பாடையிற் பிணித்து' என்கிறார் சாத்தனார். அவ்வாறு இருந்த நாகர்களுடைய குருமகன், வந்த சாதுவன் தங்கள் மொழியைப் பேசுவது கண்டு மகிழ்ந்து "அருந்துதல் இன்றி அலைகடலுழந்தோன், வருந்தினன் அளியன்; வம்மின் மாக்காள்! நம்பிக்கு இளையள் ஓர் நங்கையைக்கொடுத்து, வெங்களும் ஊனும் வேண்டுவ கொடும்!" என்று கட்டளை இட்டான். புத்தர் கொள்கையிற் பழகிய சாதுவன் நடுங்கினான்; "வெவ்வுரை கேட்டேன் வேண்

டேன்'' என்றான். நாகர் குருமகனுக்கு ஈதொன்றும் விளங்கவில்லை; சினந்து "பெண்டிரும் உண்டியும் இன்று எனின் மாக்கட்கு உண்டோ ஞாலத்து உறுபயன்; உண்டு எனில் காண்குவம் யாங்களும்; காட்டுவாயாக'' என்று உறுமினன். "கள்ளும் ஊனும் நரகத்திற்கு வழி'' என்றது கேட்டுப் பெருஞ் சிரிப்புச் சிரித்து, "உடம்பு விட்டு ஓடுமா உயிர்? அது உருக்கொண்டு வேறோர் இடம் புகுமா?'' என்று உருத்துக்கேட்டான் நாக குருமகன்.

"உயிருண்டு'' என்பதனை நிலை நாட்டத் தொடங்கினன் சாதுவன். ஆனால், தான் கற்றனவற்றை ஒப்புவித்திருப்பானனால் ஒரு பயனும் விளைந்திராது. நாகர் குருமகனது நிலைமைக் கேற்பப் பேசுவதுதான் இங்குள்ள அருமையும் பெருமையும். "உயிரோடிருக்கும்போது சிறிது கிள்ளினும் உடலம் துள்ளுகிறது. உயிர்போன பிண உடலை நெருப்பிற் சுட்டாலும் உணராது கிடக்கவில்லையா? முன் இருந்த ஒன்று இப்போது இல்லை என விளங்கவில்லையா? அதுதான் உயிர். ஒரு வீட்டில் இருந்துபோனல் இன்னொரு வீட்டிற்குத்தானே போகவேண்டும்? உயிர் இவ்வளவு தூரம் போகமுடியுமா என்று நீ கேட்கலாம். நீ கனவு காணும் போது உன் உயிர் எவ்வளவுதூரம் போயிருக்கிறது என எண்ணிப்பார்'' எனக் கூறியது அவன் மனத்திற்குப் பிடித்தது. "புலாலுண்ணது இருக்கமுடியாதே'' என வருந்தினன். "செத்தொழியும் விலங்குகளைத் தின்று தொலை. உயிர்களுக்கு ஊறு செய்யாதே'' எனச் சாதுவன் ஒரு வழி கூறினன்.

பிறர் மொழியையும் உணர்ந்து அவர்களுக்கு ஏற்ப அறவுரை வழங்கி அவர்களை உயர்த்துகின்ற தமிழர் முறை இது. இப்படிப் பலபல தீவுகளை நாகரிக வாழ்விற் கொண்டு வந்து விட்ட பெருமை தமிழர்களுக்கு உண்டு. தமிழர் இவர்களோடு மணந்தும் வாழ்ந்தனர். சோழன் நெடுமுடிக் கிள்ளி பீலிவளை என்பவளோடு கூடிவாழ்ந்த வரலாற்றை மணிமேகலைக் காவியமே கூறுகின்றது.

"நாக நாடு நடுக்கின்று ஆள்பவன்
வாகை வேலோன் வளைவணன் தேவி
வாசமயிலை வயிற்றுள் தோன்றிய, பீலிவளை

என்பதனால் அந்தப் பீலிவளை நாககுலப் பெண் என்பது தெளிவாம்.

இந்தக் கூட்டுறவால் நன்மை பெற்றார் கிழக்கிந்தியத் தீவினர் மட்டுமே என எண்ணவேண்டாம். தமிழரும் பெருஞ் சிறப்புப் பெற்றனர். சாதுவன் பெருஞ் செல்வம் பெற்றான் என மணிமேகலை கூறும். அதியமானது முன்னோர் கரும்பினைக் கிழக்கிந்தியத் தீவிலிருந்துதான் தமிழ் நாட்டிற்குக் கொணர்ந்தனர் எனப் புறநானூற்றுச் செய்யுள் ஒன்று கூறுகின்றது. கிழக்கிந்திய விளை பொருள்களின் நன்மையைத் தமிழரும் நுகர்ந்தனர் என்பதே இதன் கருத்தாகும். ஜாவாச் சருக்கரை இன்றும் நமக்கு இனிக்கவில்லையா? சாதுவனுடைய அறவுரை கிழக்கிந்தியத் தீவுக்குப் போவதும் அங்குள்ள பொருள்கள் தமிழ் நாடு புகுந்து பட்டினி போக்குவதும் என்றும் நிகழும் காட்சியாக மணிமேகலைக் காப்பியம் பாடுகிறது. அமுத சுரபி கல்விக் கடவுளின் கையிலிருந்து தமிழ் நாட்டில் தோன்றிக் கிழக்கிந்தியத் தீவிற்குப் போய்த் தமிழ் நாட்டின் பட்டினியைப் போக்க மணிமேகலை வழியே கிழக்கிந்தியத் தீவிலிருந்து திரும்புவதும் இந்தப் பேருண்மையை அன்றோ சுட்டுகின்றன. சாதுவனுடைய மனைவியாம் ஆதிரை அன்றோ, அமுத சுரபியில் முதன்முதல் அமுதிட்டவள்! இந்த உட்கோள் இல்லை என்றால் புலவர் பெருமான் சாத்தனார் சாதுவன் வரலாற்றை விரித்துக் கூறுவானேன்?

"நம் நாடு வாழ்ந்தால் மட்டும் போதாது, உலகமும் வாழ்ந்துய்ய வேண்டும்" என்ற எண்ணத்தினை நம் நாட்டினர் மனத்தினில் வேரூன்றி வளரவிட்டவர் கிழைக் கதிரவனும் புத்தர் பெருமானேயாம். அக்கதிரவனது ஒளி சுற்றுமுற்றும் பரவுவதனையே சாதுவன் வரலாற்று வழியாகத்

தமிழரது தனிப் பெருஞ் சிறப்பெனப் புலவர் பெருமானுர் பாடுகின்ருர். மணிமேகலை வரலாறு, மணிபல்லவம் முதலிய தீவுகள் இல்லையானல் எவ்வாறு மாறிப்போகும் என எண்ணிப்பார்த்தால் யாம் கூறிவரும் வரலாற்றின் நுட்பம், எளிதில் எவருக்கும் விளங்கிவிடும்.

கிழக்கிந்தியக் கடலை மணிமேகலா தெய்வத்தின் கோயிலாகக் கொள்வது நம்முடைய கடமையாகும். நமக்கும் கீழை நாடுகளுக்கும் உள்ள தொடர்பு கடவுள் விரும்பிய தொடர்பு என்பதும் உண்மை; இயற்கையோடியைந்த தொடர்பு என்பதே அதன் பொருளாம். முன்னே தமிழர் ஆட்சி அங்குச் சென்றது. அதுவன்று புத்தர் பெருமானுர் உட்கோள். என்றும் நிலவுவது அன்பு ஒன்றே. தமிழர் அன்பே இனி எங்கும்செல்லும். "மணிமேகலைக் கோயிலில் கீழைநாட்டு மக்கள் தமிழர் அன்பொளியில் ஒரு குடும்பமாக வாழ்வர். மணிமேகலா தெய்வம் மணிமேகலைக்கு அளித்த மூன்று மந்திரமும் இனிச் செயலில் விளங்க வரும்.

"வேற்றுரு எய்தவும் அந்தரம் திரியவும் ஆக்கும் இம்மந்திரம். இப்பெருமந்திரம் இரும்பசி அறுக்கும்" என்று அருள் செய்த வரலாறு இனி உண்மையாகும். மக்களைப் பிடுங்கித் தின்னும் மாக்கள் அறிவிலும் அன்பிலும் சிறந்த மக்களாவதிலும் வேற்றுரு எய்தல் எனப் பேச வேறு வியப்புண்டோ? மக்களைப் பிடுங்கித் தின்போரன்ரே இன்று வல்லரசுகள் எனச் செருக்கித் திரிவோர் எல்லாம்? அவர்களை அன்புருவாக மாற்றும் மந்திரம் காந்தியடிகள் வழியே வருங்காலம் உண்டெனில் மணிமேகலாதெய்வம் கூறிய மந்திரம் பலித்தது எனலாம் அன்ருே. அந்தரம் திரிதல் ஆகாய விமானத்தில் தமிழர் பறந்து திரிந்து உலகிற்கு உதவும் காலத்தே மெய்யாகும். ஈது ஓர் அருமைப்பாடன்று. முதலில் மறந்து, பின் நினைவிற்கு வந்ததும் கீழிறங்கி மணிமேகலா தெய்வம் தந்தரு

ளிய மந்திரமே பட்டினி நீக்கும் மந்திரமாகும். பலபல நினைக்கும்போது எல்லாச் சிறப்பிற்கும் அடிப்படையான இந்த மந்திரத்தை மறந்துவிடுவது உலக இயல்பு. பட்டினி நீங்கிய குடும்பமாகக் கிழக்குக் குடும்பம் மணிமேகலா தெய்வத்தின் கோயிலில் சிறந்து விளங்கும் நாள் வருகிறது. மணிமேகலா தெய்வம் சிறந்ததோர் உட்கோளைச் சுட்டு கிறது என்பதனைப் பாட்டின்வழியே நம் உளம்கொள வற்புறுத்தி அருளுவதே மணிமேகலைக் காப்பியம் பாடிய முத்தமிழ் ஆசான் சாத்தனாரது நோக்கமாகும். ஆதலின் அதனை மறத்தலாகாது. மணிமேகலா தெய்வம் என்றும் நின்று நிலவுக.

---

குமரி வேங்கடம் குணகடல் குடகடல்
நிலவு தமிழ்த்தாய் நீடுவா ழியவே.

அறிவு பெருக்கு
ஆண்மை கொள்
இனத்தை உயர்த்து
ஈரம் வளர்
உடலை ஓம்பு
ஊருக்கு உழை
எளிமை விரும்பு
ஏமா றுதிரு
ஐயம் அகற்று
ஒன்றி வாழ்
ஓவியம் தீட்டு
ஒளவை பேணு
கப்பல் ஓட்டு
காவியம் செய்
கிழமைக்குப் போரிடு.

—அன்பு கணபதி

# காவிரியும் உறையூரும்

கி. ஆ. பெ. விசுவநாதம், திருச்சி.

காவிரிக்கு 'யாறு' என்றும் உறையூர்க்கு 'ஊர்' என்றும் பெயர்களுண்டு. யாறெனப்படுவது காவிரி; ஊரெனப்படுவது உறையூர் என்பது புலவர்களின் வாக்கு. இது நமக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. இதை விட அதிக மகிழ்ச்சியைத் தருவது இவை இரண்டிற்கும் உரியவனை சோழ மன்னனுக்கு வேந்தன் என்று பெயர் வழங்குவதாகும். இந்த உண்மையை 'தண்ணீருங்காவிரியே தார் வேந்தன் சோழனே, மண்ணாவதும் சோழ மண்டலமே' என்ற பொய்யாமொழிப் புலவரின் வெண்பா அடிகள் நமக்கு நன்கறிவிக்கும். பல நதிகளும் பல நாடுகளும், பல மன்னர்களும் உள்ள அக்காலத்திலேயே இவ்வாறு துணிவாகக் கூறுவது எளிதானதாகாது என்று எண்ணிப் பார்க்கும்பொழுது உண்மை தானாகவே புலப்படுகிறது.

நாகரிகத்தின் சிறப்பு அறிவைப் பொறுத்ததாகும். அறிவின் சிறப்பு மக்களையும், மக்களின் சிறப்பு மன்னனையும், மன்னனின் சிறப்பு நாட்டையும், நாட்டின் சிறப்பு நகரையும், நகரின் சிறப்பு நதியையும், நதியின் சிறப்பு நீரையும் பொறுத்ததாகும். மக்களின் நாகரிகத்திற்கு நீரே அடிப்படையாக இருந்து வருகிறது. இம் முறையில் வடநாட்டு நாகரிகத்திற்குக் கங்கை நீரையும், தென்னாட்டு நாகரிகத்திற்குக் காவிரி நீரையும் அடிப்படையாகக் கூறலாம். தமிழ் நாட்டு வரலாறு எழுதப்படும்பொழுது காவிரிக் கரையிலிருந்துதான் தொடங்க வேண்டும். தமிழ் நாட்டு

வரலாறு மட்டுமல்ல, திராவிட நாட்டு வரலாறும், இந்திய நாட்டு வரலாறும், ஆசியாக்கண்டத்தின் வரலாறும், உலக வரலாறுங்கூட இங்கிருந்துதான் தொடங்கியாக வேண்டும் எனத் தெரியவருகிறது. எவ்விதம் எனில், உலகில் முதல் முதலாக மக்கள் தோன்றியவிடம் கடற்கோளால் அழிந்து போன தமிழ் நாட்டின் தென் பகுதியாகிய 'லெமூரியா' என்றவிடமே என்ற முடிவிற்கு ஆராய்ச்சியாளர்கள் நெருங்கி வந்துகொண் டிருக்கின்றனர். இதனால் உலக மக்களின் நாகரீகத்திற்குக் காவிரியும் தொண்டு செய்திருக் கிறது எனக் கூறலாம்.

இந்தியாவில் பல நதிகள் இருக்கின்றன. என்றாலும் சிறப்பு வாய்ந்த நதிகள் 10 - இவை கங்கா, யமுனா, துங்க பத்திரா, கிருஷ்ணா, கோதாவரி என வட நாட்டு நதிகள் ஐந்தும்; பெண்ணையாறு, பாலாறு, காவிரி, வைகை, பொருநை எனத் தென்னாட்டு நதிகள் ஐந்துமாகப் பிரிந்தன. பாரதியாரும், தென்னாட்டு நதிகளைக் கூறும் பொழுது 'காவிரி, தென் பெண்ணை, பாலாறு, தமிழ் கண்ட தோர் வையை, பொருநை நதி' யெனக் கூறினார்கள். காவிரி, நதிக ளின் நடுவிலிருந்தாலும் பாட்டின் முதலில் பதிந்திருப்பது நமக்கு மகிழ்ச்சியைத் தருகிறது.

காவிரிக்கு 'யாறு' என்று மட்டும் பெயரல்ல, 'நீர்' என்றும், 'புனல்' என்றும், 'பொன்னி' என்றும் பல பெயர்களிருந்திருக்கின்றன. காவிரி சூழ்ந்த நாட்டிற்கு நீர்நாடு என்றும் புனல் நாடு என்றும் பொன்னி நாடு என்றும் பெயர். காவிரிக்கும், காவிரி சூழ்ந்த நாட்டிற்கும் உரியவனான சோழ மன்னன் நீர்நாடன் என்றும், புனல் நாடன் என்றும் பொன்னி நாடன் என்றும் அழைக்கப்

பெற்றிருக்கிருன். இவற்றைப் புற நானூறு முதலிய நூல்களால் நன்கறியலாம். புனல் நாடன் என்ற பெயரானது ஒரு சிறந்த மன்னனையும் அவனது செழித்த நாட்டையும் விரிந்த நதியையும் தன்னுள் அடக்கிக் காட்டுவதை அறிந்து மகிழ வேண்டும். இது தமிழ் நாட்டிற்கும், தமிழ் மக்களுக்கும், தமிழ் மொழிக்கும் உள்ள தனிச் சிறப்பாகும்.

காவிரியின் தோற்றம் மேற்குத் தொடர்ச்சி மலையில்; காவிரியின் மறைவு கீழ்க்கடற்கரையில்; காவிரியின் நீளம் ஏறக்குறைய 400 மைல்கள்; காவிரியின் நாடு பிறந்தது குடகு நாட்டில்; தவழ்ந்தது கன்னடத்தில்; நடந்தது கொங்கநாட்டில்; தங்கியது சோழ நாட்டில்; குளிப்பது சோழ நாட்டு கடலில் ஆகும். காவிரிக்கு நிலம் கூற வேண்டுமானல் அது குறிஞ்சி நிலத்திற் பிறந்து, முல்லை நிலத்தில் தவழ்ந்து, பாலை நிலத்தில் விழாமல், மருத நிலத்தில் ஓடி விளையாடி, நெய்தல் நிலத்தில் முடிகிறது எனக் கூறலாம். காவிரி தோன்றும் இடத்திலிருந்து கடலோடு கலக்கும் இடம் வரை அது தெய்வக்காவிரியாகவே அன்றும் இன்றும் கருதப்பெற்று வருகிறது. இது அதன் வளம் பொருந்திய சிறப்பையே நமக்கு எடுத்துக்காட்டுவதாகும். ஆடி பதினெட்டில் காவிரியில் நீர் பெருகுவதும், புது வாழ்வில் புகுந்த மணமக்கள் புதுப்புனல் ஆடுதலும், தங்கள் வாழ்வும், வாழ்நாளும் பெருக வேண்டும் எனக் காவிரியைத் தெய்வமாக எண்ணி வணங்குதலுமாகியவைகள் தமிழ் நாட்டில் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக நடைபெற்று வரும் வழக்கங்களாகும்.

காவிரியாற்று நீர் சோழ மன்னர்களை வாழ்விக்கவும், காவிரியாற்று மணல் 'சோழ மன்னர்களை வாழ்த்தவும்

பயன் பெற்று வந்திருக்கின்றது. சோழ மன்னர்களை வாழ்த்திய புலவர் பெருமக்கள் காவிரியாற்று எக்கரிட்ட மணல்களைவிட அதிக ஆண்டுகள் வாழவேண்டும் என வாழ்த்தியிருக்கிறார்கள். சோழர் அரசும் அவ்விதமே உறையூரில் வாழ்ந்து வந்தது. சேரழர்குடி தோன்றியகாலம் நமக்குத் தோன்றவில்லை. கல்வெட்டுக்களும் காட்டவில்லை. 'பதியெழுவறியாப் பழங்குடியினர்' என்றும், கல்தோன்றி, மண்தோன்றாக் காலத்திற்கு முன் தோன்றிய மூத்த குடியினர்' என்றும் புலவர்கள் கூறியிருக்கிறார்கள். சோழரும், பாண்டியரும் சூரியவம்சம், சந்திரவம்சம் என—அதாவது ஞாயிறு வழியினர், திங்கள் வழியினர் என அழைக்கப்பட்டார்கள். அவர்களும் ஞாயிறுவட்ட, திங்கள் வட்டக் குடைகளைப் பிடித்திருந்தனர். இது அவர்களின் பழமையைக் காட்டுகிறதுபோலும்.

அரங்கம் என்பது ஆற்றிற்கிடையிலுள்ள மேட்டின் பெயராகும். காவிரியாறு உறையூருக்கு எதிரில் வந்து இருபுறமும் சுற்றிச் சூழ்ந்து ஒரு திரு அரங்கத்தையும் திரு அரங்கரையும், திரு அரங்க நகரையும் உண்டாக்கி இருக்கிறது. இதைப்போலவே இதே காவிரி மைசூரிலும் இருபுறமும் சுற்றிச் சூழ்ந்து ஒரு திரு அரங்கத்தையும், திரு அரங்கரையும் திரு அரங்கப் பட்டினத்தையும் உண்டாக்கி இருக்கிறது. இதனை வட மொழியாளர் ஸ்ரீரங்கம், ஸ்ரீரங்கர், ஸ்ரீரங்கப்பட்டினம் எனக் கூறுவர். அரங்கம் என்பது தமிழ்ச்சொல்.

காவிரியாற்றிற்கு இருபுறமும் கரை கட்டிய மன்னன் கரிகாற் சோழனவான். இவனுக்கு திருமாவளவன் என்றும் பெயர் உண்டு; சிறந்த போர்வீரன்; இவனது அறிவும்

ஆற்றலும் எவராலும் மறக்க முடியாதவை. 'தமிழகத் தலைமை தாங்கிய வளவன்' எனப் பெயர் பெற்றவன். காவிரிக்குக் கரைகட்டுவதற்கென்று சிங்களத் தீவிலிருந்து 10 ஆயிரம் தொழிலாளிகள் இவனால் வரவழைக்கப்பட்டனர். காவிரியின் இருபுறமுமுள்ள கிராமங்களைப் பல பிரிவுகளாகப் பிரித்து ஒவ்வொரு பிரிவும் 5 மைல் நீளம் கரை கட்டத் திட்டமிட்டு, ஆங்காங்குவேலைசெய்யும் ஆட்களுக்கு அந்தந்தக் கிராமத்தின் மூலம் அரசாங்கம் உணவளித்து 200 மைல் நீளத்திற்கு ஒரே காலத்தில் கரை கட்டிய திறமை வியக்கக்கூடியதாகும். காவிரியின் நீர் வீணாகாமலும் வெள்ளத்தால் நிலங்கள் பாழாகாமலும், நீர்ப்பாசன வசதியோடு அணைகட்டிப் புகழ்பெற்ற மன்னன் இராஜராஜ சோழன் ஆவான். இவன் கி. பி. 985 முதல் 1013-வரை அரசாண்ட அறிஞன். இவனால் கட்டப் பெற்ற தஞ்சாவூர்ப் பெரிய கோவில் 950 ஆண்டுகளாகியும் நிலைத்து நின்று, புத்தம் புதிதாகத் தோன்றி அம்மன்னனுடைய புகழுடம்பிற்கு உலக மக்களிடையே இன்னும் உயிர் கொடுத்துக்கொண்டிருக்கிறது. இக்கோவில் கட்டுவதற்குப் பெருங் கற்களைத் தோணிகள் மூலம் கொண்டுவர நமது காவிரி பேருதவி செய்திருக்கிறது.

சிலப்பதிகாரம் என்ற தமிழ்ப் பெருங்காப்பியம் தமிழ் மக்களின் செல்வக் கருவூலமாகும். இந்நூல் தோன்றி இன்றைக்கு 1800 ஆண்டுகள் ஆயின. இந்நூலை இயற்றியவர் சேரநாட்டு இளவரசர். துறவு பூண்டவராதலின் இளங்கோ அடிகள் எனப் பெயர் பெற்றார். இவர் இந்நூலில் காவிரியைக் குறிப்பிடும்பொழுது காவிரிப் பேர் யாறு என்றும், சோழர் தம் தெய்வக் காவிரி என்றும் கூறியிருக்கின்றார். கல்வியிற் பெரியவராகிய கம்பர் தாம் இயற்றி

யுள்ள இராமாயணத்தில் காவிரியை 'கங்கையிற் புனித மாய காவிரி' எனக் கூறியிருப்பது வியப்பைத் தருகிறது. 'வான்பொய்ப்பினும் தான் பொய்யாது' என்பது காவிரியின் சிறப்பைக் காட்டுவதாகும்.

இத்தகைய சிறப்புகளைப் பெற்றுத் தெளிந்து, பரந்து, விரிந்து, நீண்டு ஓடுகின்ற காவிரியாற்றின் தென் கரையில் தான் பெரும்பேறும், பெரும் புகழும் பெற்ற உறையூர் நகரம் அமைந்திருக்கிறது.

உறையூர் என்பது மக்கள் உறையும் ஊர் என்றும், உறைவதற்கு ஏற்ற ஊர் என்றும் பொருள் பெறும். ஊர் என்பது பொருள் அமைதியுடைய தமிழ்ச் சொல். மக்கள் கூட்டங் கூட்டமாக ஊர்ந்து சென்று தங்கிய விடங்களுக்கு அக்காலத்து மக்கள் வழங்கிய பெயரே ஊர் என்பதாகும். உறையூர்க்கு 'உறந்தை' எனவும் பெயருண்டு. கோழி நகர் எனவும் கூறப் பெறும். உறையூர் தோன்றிய வரலாறு வீரத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. ஒரு கோழியானது தன்னையணுகிய யானையோடு போர் செய்து, சிறகை விரித்துப் பறந்து, கொத்தி, விரட்டி வென்றதை அறிந்த சோழ மன்னன் அந்த விடத்தையே தன் இருப்பிடமாகக் கொண்டான் என்பது கோழி நகர் வரலாறு. இளங்கோ அடிகள் சிலப்பதிகாரத்தில் உறை யூரைப்பற்றிக் கூறும்பொழுது 'முறஞ்செவிவாரணம் முன் சம முருக்கிய புறஞ்செவிவாரணம்' எனக் கூறியிருப்பதும் இவ்வரலாற்றை மெய்ப்பிக்கிறது. காரிக்கண்ணனார் என்ற பழந்தமிழ்ப் புலவர் ஒருவர் உறையூரை 'அறந்தங்கும் உறையூர்' எனப் புகழ் தங்கக் கூறியிருக்கிறார். காவிரியை அடுத்து உறையூரும், உறையூரை அடுத்துக் காவிரியும்

அமைந்ததினால் இரண்டும் புகழ்பெற்று விளங்கின எனக் கூறலாம்.

உறையூர்ச் சோழமன்னர்களுக்கு நெடுங்காலம் தலைநகராக இருந்திருக்கிறது. சிலகாலங்களில் தஞ்சை, திருவாரூர், கங்கைகொண்ட சோழபுரம் காஞ்சீவரம், காவிரிப்பூம்பட்டினம் ஆகிய நகரங்களும் தலை நகர்களாக இருந்திருக்கின்றன. கி. பி. இரண்டாம் நூற்றாண்டிலேயே உறையூரிலிருந்து கிழக்கே காவிரிப்பூம்பட்டினத்திற்கும், மேற்கே வஞ்சி நகருக்கும், தெற்கே மதுரை நகருக்கும் வண்டிப் போக்குவரவு, படைகள் போக்கு வரவுக்குரிய பாதைகள் செவ்வையாய் அமைந்திருந்ததாகத் தெரிகிறது. தரைப் பாதைகளைப் போலவே ஆற்றுப் பாதைகளையும் போக்குவரவுக்குப் பயன்படுத்தி வந்திருக்கிறார்கள். 1916-ம் ஆண்டிற் கூட மூங்கிற் கட்டுகள் ஈரோட்டிலிருந்தும் பவானியிலிருந்தும் காவிரி வழியாக திருச்சிக்கு வந்து சேர்ந்ததை நான் நன்கறிவேன்.

மதுரையில் இருந்தது போன்ற ஒரு தமிழ்ச் சங்கமும் பல நூல் நிலையங்களும் அக்காலத்திய உறையூரிலிருந்தன. அரசாட்சி வியக்கத்தக்க முறையில் நடைபெற்றிருக்கிறது. அலெக்சாண்டருக்கும், அசோகருக்கும் கூட உறையூர் தலைவணங்கியதில்லை. கி. பி. 7ம் நூற்றாண்டில் சோழர் ஆட்சி உறையூரில் வலுக் குறைந்து சிதைந்தது. மீண்டும் 846ல் வீர விஜயாலயச் சோழனால் சோழர் ஆட்சி வலுவாக நிறுவப் பெற்றது. 12ம் நூற்றாண்டு வரை மிகுந்த புகழ் பெற்று விளங்கியது. மதுரையை யாண்ட முதலாவது மாறவர்ம சுந்தரபாண்டியன் கி. பி. 1225ல் உறையூரையும் தஞ்சாவூரையும் தீயிட்டுக் கொளுத்தி, வெற்றி பெற்றுத்

திரும்பவும் இவ்வூர்களைச் சோழர்களிடமே கொடுத்துச் சென்று விட்டான். இவ்வரலாறு திருக்காட்டுப்பள்ளிக் கல் வெட்டுகளிலும் திருவரங்கக் கல் வெட்டுகளிலும் காணப் படுகின்றது.

பராந்தகன் ஆட்சிக்காலத்தில் உறையூரில் மண்மாரி பெய்ததாகவும், நகர் அழிந்ததாகவும், திரிசிராமலை செவ்வந் திப் புராணம் கூறுகிறது. முதல் பராந்தகன் 907 முதல் 953 வரை ஆண்டிருந்தான். 2ம் பராந்தகன் 961 முதல் 969 வரையிலும் ஆண்டிருக்கிறான். மண்மாரி பெய்தது எவன் காலத்தில்? எப்படி? என்பதை அறிய முடியவில்லை. தப்பிப் பிழைத்த சோழனுடைய மனைவி கரையேறிய இடத் திற்குத்தான் உத்தம சேரி என்ற பெயர் என்பது காது காதாகக் கேட்டுவரும் (கர்ண பரம்பரை) செய்தி.

16ம் நூற்றாண்டு மத்தியில் உறையூரை ஆட்சி செய்த சோழன், பாண்டி நாட்டின் மீது படை எடுத்து வெற்றி பெற்றான். தோற்று ஓடிய பாண்டி மன்னன் விஜய நகர ராஜ்யம் சென்று அடைக்கலம் புகுந்து சோழனோடு சண்டை செய்ய அவர்களை அழைத்து வந்தான். இதன் பயனாகச் சோழ நாடும், பாண்டி நாடும் நாயக்கர் ஆட்சிக்கு உட்பட்டு விட்டது. உறையூர் நகரத்தில் சோழர் ஆட்சிக் கும், பாண்டியர் ஆட்சிக்கும் 1559ம் ஆண்டில் முற்றுப் புள்ளி வைக்கப் பெற்றது. தமிழ் மன்னர்களின் ஆட்சி வீழ்ந்தபொழுதே தமிழ் மக்களின் வாழ்வும் வீழத் தொடங்கியது. காவிரியும் உறையூரும் கண்கலங்கின.

1559 முதல் 1736 வரை உறையூர் நாயக்கர் ஆட்சி யில் அடங்கி யிருந்தது. தென்னாட்டில் விஜய நகர ராஜ்

யத்தை முத்தன் முதலாக நிலை நிறுத்தியவன் விசுவநாத நாயக்கனுவான்.

திருச்சியில் காணப்படும் மேலைக்கோட்டை வாயிலும் ஆண்டார் தெருவிற் காணப்படும் கோட்டைச் சுவரும் நாயக்கர்களின் கர்லத்தில் கட்டப் பெற்றவையாகும். நாயக்கர் வழி வந்த கடைசி அரசி, ராணி மங்கம்மாளின் மருகி மீனுட்சியம்மாளிடமிருந்து திருச்சியும் உறையூரும் ஆர்க்காடு நவாப்பிடம் சென்றது.

கி. பி. 18ம் நூற்றுண்டின் இறுதியில் உறையூருக்காகப் பிரஞ்சுக்காரருக்கும் பிரிட்டிஷ்காரருக்கும் உறையூரைச் சுற்றிச் சண்டை நடந்திருக்கிறது. திருச்சிக்குக் கிழக்கே ஒரு மைல் தூரத்தில் சந்தைப் பேட்டை மலை என்று ஒன்றிருக்கிறது அதன் பெயர் அதுவல்ல; அதன் உண்மைப் பெயர் 'சண்டை போட்ட மலை' என்பதாகும். ஆங்கிலத்தில் அம் மலைக்கு 'French Rock' என்று பெயர். இன்றைக்கும் இம்மலை பழமையைப் பாதுகாக்கும் அதிகாரிகளால் பாதுகாக்கப் பெற்று வருகிறது. 182Oம் ஆண்டிற் கூட உறையூரில் பிரிட்டிஷ் துருப்புகளிருந்தன.

உறையூரில் சுண்டைக்காய்ப்பாறை என ஒன்றுண்டு. அதில் ஒரு சுனையும், சுனை அருகில் ஒரு கல்வெட்டும் இருக்கின்றன. அவைகளைப்பற்றிச் சொல்லப்படும் கதைகள் மிகப் பயங்கரமானவைகளாக விருக்கின்றன. உண்மை என்னவென இன்னும் விளங்க வில்லை. இவை ஆராயத் தக்கவை.

பழங்காலத்தில் மட்டுமல்ல. இக்காலத்திலும் உறையூர் புகழ் பெற்று வருகிறது. திருச்சியும் உறையூரும்

1866-ல் நகரசபைக்கு ஆட்சிக்கு உட்பட்டது. திருச்சி நகர சபைக்கு உறையூர் இன்னும் தலைநகரமாக இருந்து வருகிறது நெசவுத் தொழிலுக்கு உறையூர் புகழ் பெற்றதாகும். சென்னை மாகாணத்திலேயே கருங்கல் சிற்பத் தொழிலுக்கு உறையூர் சிறந்ததாகும். இந்தியா என்ன? உலக முழுவதற்குமே சுருட்டுத் தொழிலில் சிறந்த பெயர் பெற்று விளங்கி வருவது உறையூரேயாகும். இதுகாறும் கூறியவைகளால் காவிரியும், உறையூரும் பழமையிலும் புதுமையிலும் புகழ் பெற்றவை என நன்கு விளங்கும்.

(தமிழ் நாட்டு உயர்தரப் பள்ளிகளுக்காக
24-9-46-ல் வானொலி மூலம் ஒலி பரப்பியது)

T. K. S. சகோதரர்களின்
--- நாடகம் ---
பாலக்காடு கௌடர் டாக்கீசில்
3-12-46 முதல் 14-12-46 வரை
— சிவ லீலா —
15-12-46 ஒரே நாள்
மனோஹரா
தினசரி இரவு......9-45-க்கு
(டிக்கெட் வரியுள்பட) :—2—12—0, 1—10—0,
0—13—0, 0—6—6

# எல்லைக் கிளர்ச்சி

கொ. மோ. ஜனார்த்தனம்

அரசியல் நிர்ணய சபை கூடி, வருங்கால அரசியலை நிர்ணயிக்க முனைந்துள்ளது. இந்தச் சபையின் வேலைகளில் ஒன்று, இந்திய மாகாணங்களின் எல்லையை வரையறுப்பது. எனவே தமிழர், ஆந்திரர், கேரளர், கன்னடர், மகாராட்டிரர் ஆகிய தேசிய இனங்களின் தலைவர்களும் அவைகளின் பலவேறு அரசியல் அமைப்புகளும் தங்கள் தங்கள் தாயகங்களின் எல்லையை வரையறுக்க முனைந்து விட்டன.

பிரிட்டிஷ் தமிழகத்தின் அரசியல் கட்சிகளோ அதன் தலைவர்களோ துண்டுபட்டுக் கிடக்கும் தமிழகத்தை ஒன்று படுத்தும் வேலையில் ஊக்கம் காட்டுகிறார்கள் இல்லை. ஆனால் திருவிதாங்கூர் சமஸ்தானத் தமிழகத்திலுள்ள அரசியல் வாதிகள் இன்று மலையாளிகள் ஆதிக்கத்தில் உள்ள சுமார் 2000 சதுரமைல் விஸ்தீரணமுள்ள தமிழர் நிலத்தையும் 12-லட்சம் தமிழ் மக்களையும் பிரிட்டிஷ் தமிழகத்துடன் சேர்த்து, புதிய தமிழகத்தைச் சிருஷ்டிக்கும் வேலையில் தீவிரம் காட்டுகின்றனர். அகில கேரளத்தில் திருவிதாங்கூர் தமிழகத்தையும் சேர்த்துக்கொள்ளலாம் என்று கனவு கண்ட மலையாளத் தலைவர்களின் ஆசையில் மண்ணறைந்து விட்டனர்.

"தமிழ் முரசு" ஐந்தாம் புத்தகத்தில் திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள் எழுதியிருந்த "புதிய தமிழகம்" என்ற கட்டுரையில் திருவிதாங்கூர்த் தமிழர்களின் கோரிக்கையை ஆதரித்ததானது அந்த மக்களின் உணர்ச்சியை மேலும் ஊக்குவிப்பதாயிற்று. "எங்கள் நிலையை நீங்கள்

நேரில் வந்து பார்க்கவேண்டும்—பார்த்தே தீரவேண்டும்" என்றெல்லாம் ம. பொ. சி. அவர்களுக்குக் கடிதங்கள் வந்த வண்ணமாக இருந்தன.

புதிய தமிழகத்தைக் காணத் துடியாய்த் துடிக்கும் அவருக்கும் என்போன்ற இளைஞர்கள் எல்லோருக்கும் கூட, இந்த அழைப்பானது பழம் நழுவிப் பாலில் விழுந்ததுபோல் ஆயிற்று.

அக்டோபர் 24-ம் தேதி இரவு சென்னையை விட்டுப் புறப்பட்டு மறுநாள் இரவு 7½-மணிக்கு திருவனந்தபுரம் சேர்ந்தோம். அங்கிருந்து பஸ்ஸில் இரவு 11-மணிக்கு திருவிதாங்கூர்த் தமிழ்நாட்டின் தலைநகரான நாகர்கோவிலுக்குப் போய்ச் சேர்ந்தோம். பஸ் நிலையத்தில் எண்ணற்ற தமிழ் இளைஞர்கள் கூடி எங்களைக் களிப்புடன் வரவேற்றனர். "தமிழ் வாழ்க" "தமிழினம் வாழ்க." "தமிழ்நாடு தமிழருக்கே" "தமிழருக்குச் சுயநிர்ணயம் வேண்டும்" என்ற இன்பத் தமிழோசை எங்கள் காதுகளின் வழியாக உள்ளத்தே சென்று பாய்ந்தது. மூவர்ணக் கொடியுடன், கதராடையணிந்த தேசபக்தக் கூட்டத்தினர்தான் இப்படி முழங்கினர். இந்த நிலை பிரிட்டிஷ் தமிழகத்தில் வரும் நாள்தான் தமிழகத்தில் தமிழரசு தோன்றும் நன்னாளாகும்.

இரவு 12-மணிக்கு இருளை விலக்கி ஒளியூட்டும் மின்சார விளக்குகளைவிட எங்களை வரவேற்ற இளைஞர்களின் உள்ளத்தே தோன்றிய உண்மையொளி அவர்களின் முகத்தே வீசக்கண்டோம். இரவு 2-மணிவரை அந்த வீரத் தமிழிளைஞர்களின் மத்தியில் நாங்கள் 'சிறை'ப்பட்டு விட்டோம். அவர்கள் கேட்ட கேள்விகளிலிருந்து மலையாள

ஆட்சியில் அவர்களுக்குள்ள மனக்குறை வெளிப்பட்டது. அதுமட்டுமா! தங்களை மறந்த தமிழினத்தவரை — தமிழ் நாட்டுத் தலைவர்களைப்பற்றியும் அந்த இளைஞர்கள் குறைப் பட்டுக் கொண்டபோது நாங்களே வெட்கித் தலைகுனிய வேண்டியிருந்தது.

மறுநாள் காலை குமரி முனைக்குச் சென்றோம். அங்கு எதையோ பார்த்து, 'நில்' என்று கைகாட்டித் தடுப்பது போல் கன்னித் தெய்வத்தின் சிலை எங்களுக்குக் காட்சி யளித்தது. பண்டைத் தமிழகத்தின் பெரும் பகுதியை விழுங்கிய கொடுங்கடல் எஞ்சியுள்ள நிலத்தையும் எங்கே விழுங்கிவிடுமோ என்று அஞ்சித்தான் தமிழன் கடலருகே கன்னித் தெய்வத்தைக் காவல்வைத்தான்போலும்! நாங்க ளும் அதே கடலருகே கன்னித்தெய்வத்தின் முன்னிலை யில், 'புதிய தமிழகத்தை—தமிழகத்தில் தனியரசைக் கண்டே தீருவோம்' என்று உறுதிகொண்டோம்.

25-ந்தேதி மாலை வடிவீஸ்வரத்தில் வடிவை வாலிப சங்கத்தின் ஆண்டு விழா நடந்தது. திரு. நத்தானியல் தலைமை தாங்கினர். திரு. ம பொ. சி. பேசியதாவது:—

"தமிழர்க்குரிய நிலத்தில் ஓரங்குலமும் விடக்கூடாது. தமிழர்கள் கேரள நாட்டிற்குக் குடியேறியவர்கள் அல்லர். அது அவர்களின் பரம்பரைத் தாயகம். முன்னோர்களின் சொத்து. சேரர் என்ற பழந்தமிழ்க் குடிமக்கள் கேரள ராகியதோடு சேரநாடும் கேரள நாடாகி விட்டது. இனியும் எஞ்சியுள்ள தமிழகத்தையும் நாம் இழந்துவிடத் தயாராய் இல்லை. மலையாளிகளின் அகில கேரள இயக்கத்துக்கு நாம் மனப்பூர்வமாக ஆசி வழங்கத் தயார். அதேபோல் தமிழர்களின் புதிய தமிழகக் கோரிக்கையை மலையாளிகளும் ஆதரிக்கவேண்டும். ஏனெனில் நாம் சகோதர தேசிய இனங்கள்."

மறுநாள் வடசேரியில் மனோன்மணி சுந்தரனர் கழகத் தின் ஆண்டுவிழாவில் வழக்கறிஞர் திரு. சிதம்பரம் பிள்ளை தலைமை தாங்கினர். 27-ந்தேதி மாலை குளச்சல், இரணி

யல் ஆகிய இடங்களிலும், 28-ந் தேதி காலை மயிலாடியி லும் பொதுக் கூட்டங்களில் பேசினோம். எங்கள் சுற்றுப் பிரயாணத்தின்போது இடைவிடாது மழை பெய்தாலும் எல்லாக் கூட்டங்களிலும் பொது மக்கள் திரள் திரளாகக் கூடியிருந்தனர். உற்சாகம் சொல்லி முடியாது.

திருவிதாங்கூரில் தமிழர்கள் நிலைமையை, தமிழினத்த வராகிய நாம் அடியோடு மறந்துவிட்டோம். கவிமணி. தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள், எங்களைக் கண்ட வுடன் "தமிழ் நாட்டிலிருந்தா நீங்கள் வருகின்றீர்கள்? உங் களை வாழ்த்துகின்றேன். நாங்கள் இங்கு இருப்பதாகத் தாயினத்தவராகிய உங்களுக்கு இப்பொழுதாவது நினைவு வந்ததே, மிக்க மகிழ்ச்சி" என்று கூறினார். இப்படித்தான் திருவிதாங்கூர்த் தமிழர் அனைவரும் எண்ணி ஏங்குகின்றார் கள். அவர்கள் அங்கே படும் அல்லல்களைவிட, நாம் அவர் களைப்பற்றிப் பராமுகமாக இருப்பதுதான் அவர்களுக்கு அதிகக் கவலையை அளிக்கின்றது. இதைத் தமிழினத்தவ ராகிய நாம் உணரவேண்டும்.

சுருங்கக்கூறினால், வளமான வயல்களிருந்தும் வயிறார சோறில்லை; தேன்மணக்கும் தமிழிருந்தும் சாண் வயிற்றிற் காக மலையாள மொழியைக் கற்றே தீரவேண்டும்; வரையறுக் கப்பட்ட நாடிருந்தும், இன உணர்ச்சி பெற்ற மக்களிருந் தும், சுயநிர்ணய உரிமையின்றி தவிக்கின்றனர் தமிழர்கள்.

தமிழ் நாட்டிலுள்ள எல்லா அரசியல் கட்சிகளும், பத்திரிகைகளும் திருவிதாங்கூர்த் தமிழ் நாட்டிலுள்ள தமி ழினத்தாரின், சுய நிர்ணய உரிமையை ஆதரித்து, புதிய தமிழகத்தை உருவாக்க முன்வர வேண்டும். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி திருவிதாங்கூர்த் தமிழர்பால் கருத்துக் கொண்டு 'சட்டம் இடந்தரவில்லை' என்று சாக்குச் சொல் லாது, திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரசுக்கு ஆதரவையும், பலத்தையும் தேடித்தருவது, அதன் தலையாக கடன் என் பதை உணர வேண்டும்.

# தமிழரும் அரசியல் நிர்ணய சபையும்

ம. போ. சிவஞானம்

அரசியல் நிர்ணய சபை வேலை செய்யத் துவங்கிவிட்டது. சுதந்திர இந்தியாவில் அல்ல; அடிமை இந்தியாவில். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியக் கொடி அதிகாரத் திமிருடன் ஆடிப் பறக்க, ஆட்டிவைக்கும் சூத்திரதாரியாக ஆங்கில வைசிராய் அரியாசனத்தே அமர்ந்திருக்க, பிரிட்டிஷ் ராணுவம், "மன்னர் பிரானின்-அவரது பிரதிநிதியின் ஆணையைத் தவிர மற்றவர் ஆணையை மதியோம்" என்ற செருக்குடன் ஆயுதபாணிகளாய் இந்திய மண்ணில் காலூன்றி நிற்க, இந்த நிலையில்தான், அரசியல் நிர்ணய சபை வருங்கால இந்தியாவின் அரசியலை வகுக்கக் கூடியிருக்கிறது.

அச்சபையின் பிரதிநிதிகள் வயதுவந்த வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் அல்லர். இந்து, முஸ்லிம், சீக்கியர் என்று மதவாரி ஸ்தானங்கள் ஒதுக்கப்பட்டு மாகாணச் சட்டசபைகளிலுள்ள அந்தந்த மதத்தின் அங்கத்தினர்களாலேயே தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள். எனவே, இந்த அ. நி. சபையின் அங்கத்தினர்களை மக்களின் பிரதிநிதிகள் என்னாமல் மதங்களின் பிரதிநிதிகள் என்பதே சாலப் பொருந்தும்.

இனி, அச்சபையின் முன்னுள்ள திட்டத்தை ஆராய்வோம். அ. நி. சபை பிரிட்டிஷ் தூது கோஷ்டியார் தயாரித்து அளித்த திட்டத்தை அடிப்படையாகக் கொண்டுதான் இந்திய அரசியலை வகுக்க வேண்டுமென்பது ஏகாதிபத்தியத்தின் ஆணை.

அத்திட்டப்படி அ. நி. சபையின் முதல் வேலை ஏகாதிபத்தியத்தை வெளியேற்றுவது அல்ல. இந்தியாவில் உள்ள பல்வேறு மதங்களின் உரிமைகளுக்கும் பங்கம் இல்லாத வகையில் ஓர் அரசியலை தயாரிப்பதேயாகும்.

அச்சபை முதற் கூட்டத்திற்குப் பிறகு 'ஏ' 'பி' 'சி' என்ற மூன்று தொகுதிகளாகப் பிரிந்து அம்மூன்று தொகுதிகளின் அரசியலையும் அத்தொகுதிகளில் அடங்கிய மாகாணங்களின் அரசியலையும் வகுக்க வேண்டும்.

இவ்வாறு தொகுதி சர்க்கார், மாகாண சர்க்கார்கள், மத்திய யூனியன் சர்க்கர் ஆகிய மூன்றுவித அரசாங்கங்களின் அமைப்புகளையும் தயாரித்த பிறகே பிரிட்டிஷ் சர்க்காரை வெளியேற்றும் பிரச்னை எழுகிறது. அப்போதும் பிரிட்டிஷ் சர்க்காருடன் சமரசமாகப் பேசி இந்திய-பிரிட்டிஷ் ஒப்பந்தத்தின் மூலம்தான் இந்தியா சுதந்திர நாடாக ஆகமுடியும.

இவ்வளவு மோசமான ஒரு அமைப்பின் திட்டத்தின் மூலம் தேசிய இந்தியாவின சுதந்தரக்கோரிக்கையைப் பூர்த்திசெய்ய முடியுமா ? முடியாதென்றே நான் அஞ்சுகின்றேன். ஏகாதிபத்திய—வகுப்பு வாதிகளின் சதிச்செயல்கள் இப்போதே அச்சபையைத் தாக்க ஆரம்பித்து விட்டன. ஆயினும், காங்கிரஸ் அரசியல் நிர்ணய சபையில் பங்கு கொள்வதன்மூலம் ராஜ தந்திர முனையில் தனது சுதந்தரப் போராட்டத்தை நடத்த முற்பட்டு விட்டது. எனவே அத்துறையில் அது பூரண வெற்றியை அடையவேண்டுமென்றே ஒவ்வொரு தமிழரும் விரும்புகின்றனர்.

ஆனல், பிரிட்டிஷ் திட்டப்படி ஏகாதிபத்தியத்தை வெளியேற்றுவதை அ. நி. சபையின் இறுதிக் கடமை என்று காங்கிரஸும் எண்ணுமானல், அது தன்னை யறியாமலே ஏகாதிபத்தியம் தோண்டிவைத்த வகுப்பு வாதப் படுகுழியில வீழ்வதற்கொப்பாகும். இந்த தற்கொலைப் பாதையில் காங்கிரஸ் போகக்கூடாது.

ஆகவே, ஏகாதிபத்தியத்தை வெளியேற்றி, இந்தியாவின் சுதந்தரத்தைப் பிரகடனம் செய்வதோடு இந்த அ. நி சபையின் ஆயுளை முடித்துவிட்டு, சுதந்தர இந்தியாவின் அரசியலை வகுக்க வயதுவந்த வாக்காளர்களால் தேர்ந்

தெடுக்கப்பட்டதும், இந்திய தேசிய இனங்களுக்குப் பிரதிநிதித்துவம் வாய்ந்ததுமான மற்றோர் அரசியல் நிர்ணய சபையைக் கூட்டுவதற்கான முயற்சியில் காங்கிரஸ் ஈடுபட வேண்டும். இதுதான் தேசிய இந்தியா காங்கிரஸ் பிரதிநிதிகளுக்கு இடும் ஆணை.

இதற்கு மாறாக, காங்கிரஸ் பிரிட்டிஷ் திட்டத்தின் அடிப்படையில், வருங்கால இந்தியாவின் அரசியலை வகுக்கும் வேலையை மேற்கொள்ளுமானால், அது அம்முயற்சியில் வெற்றிபெறுவது முடியாது என்பதோடு, அச்செயல் இந்திய தேசிய இனங்களுக்குக் குறிப்பாக தமிழினத்தவருக்கு தவிர்க்க முடியாத கேடு சூழ்வதற் கொப்பாகும். அது எப்படி என்பதை ஆராய்வோம்.

இப்போது தமிழ் நாட்டின் சார்பாக அ. நி. சபையில் கலந்து கொண்டுள்ளவர்களின் தேசபக்திக்கு நாம் மதிப்பு கொடுக்கிறோம். ஆனால் அவர்கள் தேசீய இந்தியாவின் சுதந்தர உணர்ச்சிக்குப் பிரதிநிதிகளே யொழிய, தமிழ் இனத்தவரின் தனிப்பட்ட நலன்களுக்குப் பிரதிநிதிகளல்லர். ஏனெனில், தமிழ் நாட்டின் எல்லை, தமிழர்களின் அரசியல், பொருளாதார உரிமைகளைப்பற்றிய எந்த திட்டத்தின் மீதும் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களல்லர். ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்பில் இந்தியா இருக்கும் வரை தனி இனத்தின் நலன்களைப்பற்றிப் பேசுவது பாவமென்றும் சொல்லப்பட்டது. எனவே, தமிழ் நாட்டுப் பிரதிநிதிகள் தாங்கள் ஒரு தனி இனத்தின் பிரதிநிதிகள் என்ற எண்ணத்துடன் சுயமாகச் சிந்தித்துச் சுதந்தரமாக நடந்துகொள்வார்கள் என்று எதிர்பார்க்கமுடியாது.

மேலும், தமிழர் அல்லாத, தமிழகத்தைத் தாயகமாகக் கருதாத கோயங்காவும், பாலக்காடு அம்மு சாமிநாதன், கொச்சி தாட்சாயணி வேலாயுதம் போன்ற கேரளப் பெண்மணிகளும் தமிழர்களால் தமிழ் நாட்டுப் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அ. நி. சபையில் கலந்து கொண்டுள்ளனர்.

ஏகாதிபத்தியச் சுரண்டலிலிருந்து இந்தியா விடுபடுவதுபோல், வடநாட்டாரின் சுரண்டலிலிருந்தும் தமிழ் நாடு விடுதலை பெறவேண்டும் என்பதே தமிழரின் பொருளாதாரக் கொள்கை. இதை கோயங்கா ஏற்பாரா? "ருசிகண்ட பூனை உறியைத் தாவாமலிருக்காது" என்பது பழமொழியன்றோ?

திருவிதாங்கூர் தமிழகத்தைப் புதிய தமிழகத்துடன் சேர்ப்பதை மேற்சொன்ன மலையாளப் பெண்மணிகள் விரும்புவார்களா? ஒருநாளும் இல்லை. ஏனெனில், அவ்விருவரும் திருவிதாங்கூர் தமிழகம் உள்ளிட்ட நவீன கேரள மாகாணங் காணும் இயக்கத்தை பகிரங்கமாக ஆதரித்துள்ளனர். இத்தகையவர்கள் எப்படித் தமிழ் இனத்தவரின் பிரதிநிதிகளாக இருக்கமுடியும்? 'பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன்' என்பது எப்படி பொருந்தும்.

இனி, காங்கிரஸ் எந்த அடிப்படையில் வருங்கால இந்தியாவின் அரசியலை வகுக்கப் போகின்றது என்பதும் கவனிக்கத் தக்க விஷயம்.

பிரிட்டிஷ் திட்டத்திலுள்ள தொகுதி முறையை ஏற்பதில்லையென காங்கிரஸ் செய்துள்ள முடிவு வரவேற்கத் தக்கதே. ஆனால், தொகுதி முறை தொலைந்து விடுவதனாலேயே மாகாணங்களில் பூரண சுதந்தரமுள்ள குடியரசுகள் அமைந்துவிடுமென்று எண்ணுவதற்கில்லை.

ஏனெனில், காங்கிரஸ் தலைமையினர் மாகாணங்களின் சுதந்தரத்தைவிட மத்திய சர்க்காரின் பலத்தையே பெரிதாக மதிக்கின்றனர். பிரிட்டிஷ் மந்திரி சபைத் தூதுகோஷ்டியார் இந்தியா வந்திருந்த காலை, அப்போது காங்கிரஸ் தலைவராயிருந்த மௌலானா ஆஸாத் தூதினருக்கு எழுதிய கடிதத்தில்,

"ராணுவம், போக்குவரத்து, அயல் நாட்டு ராஜீய உறவு ஆகிய மூன்று பொறுப்புக்கள் மத்திய யூனியன் சர்க்காருக்கென்றும், மற்றவை மாகாணங்களுக்கென்றும் தூதினர் சொல்வதைக் காங்கிரஸ் ஏற்க முடியாது.

வர்த்தகம், கைத்தொழில், நிதி, சங்கம் ஆகிய பொறுப்புக்களும் மத்திய சர்க்காருக்கே இருக்கவேண்டுமென்பது காங்கிரஸின் திடமான கோரிக்கை''

என்று குறிப்பிட்டிருந்தார்.

இதன்படி பார்த்தால், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தால் அமைக்கப்பட்டுள்ள தற்போதைய மத்திய சர்க்காருக்குள்ள அதிகாரங்கள் ஏகாதிபத்தியம் வெளியேறிய பிறகும் நீடிக்க வேண்டுமென்பதே காங்கிரஸ் தலைமையினரின் கொள்கை யென்று ஏற்படுகின்றது. இதைச் சுதந்தர ஆர்வமுள்ள எந்தத் தமிழனேனும் ஏற்கமுடியுமா? இந்தியாவிலுள்ள இதர இனங்களுடன் உறவுகொள்ளத் தமிழர் விரும்புகின்றனர். ஆனால் உறவு என்பது உரிமையைப் பறிகொடுப்பதா யிருக்கக்கூடாது.

எந்த ஒரு அரசாங்கத்திற்கும் உயிர் நாடியா யிருக்கக் கூடிய வாத்தகம், கைத்தொழில், நிதி ஆகியவற்றில் மாகாணங்களுக்குச் சுதந்தரமில்லை யென்றால் அப்புறம் மாகாண சுதந்திரம் என்பது வெறும் ஏமாற்று வார்த்தையாகத்தான் முடியும். இன்றைய ஏகாதிபத்திய இந்தியாவில் வர்த்தக ஆதிக்கத்திற்குப் பம்பாய், கைத்தொழில் ஆக்கத்திற்கு ஆமதாபாத், ராணுவத்திறமைக்குப் பாஞ்சாலம் என்றாகிவிட்டது. தமிழரின் வீரம்விளங்க, கைத்தொழில் ஓங்க, வாணிபம் வளர வழியில்லை எல்லாம் வட இந்தியாவில் தான். ஏகாதிபத்தியம் ஒழிந்த சுதந்தர இந்தியாவிலும் தமிழர் நிலை இதேமாதிரிதான் என்றால் "இந்தியாவுக்குச் சுதந்தரம் என்பது வடக்கு உயர்ந்து, தெற்கு தாழ்வது'' என்றுதான் பொருளாயிருக்கவேண்டும்.

இதுவரை நாம் கூறிவந்த காரணங்களால் தற்போது புது டில்லியில் கூடியுள்ள அ நி சபையானது இந்திய தேசீய இனங்களின் சுய நிர்ணயக் கோரிக்கையைப் பூர்த்தி செய்ய முடியாது என்பது தெளிவாகிவிட்டது. அ. நி. சபையின் அமைப்பு, பிரிட்டிஷ் திட்டம், காங்கிரஸ் தலைமையி

னர் மனப்பான்மை ஆகிய அனைத்தும் தேசிய இனங்களின் சுதந்தரக் கோரிக்கைக்கு விரோதமாகவே இருக்கின்றன.

காங்கிரஸ் தலைமையினரின் தேசபக்தியில் நமக்குப் பூரண மதிப்புண்டு. ஆனால், தமிழரின் சுப நிர்ணயக் கோரிக்கைக்கு மாறாக அவர்கள் காட்டும் எந்தப் பாதையிலும் தமிழா ஓர் அடிகூட எடுத்துவைக்க முடியாது.

இந்த அபிப்பிராயம் காங்கிரஸின் அடிப்படைக் கொள்கைக்குச் சிறிதும் மாறானதல்ல. காங்கிரஸ் இன்று கருதப்படுவதுபோல ஹிந்து, முகம்மதிய, சீக்கிய மதங்கள் கலந்த ஐக்கிய ஸ்தாபனமாக ஆரம்பமாகவில்லை. தமிழர், ஆந்திரர், பஞசாபியர், பட்டாணியர்போன்ற தேசிய இனங்களின் ஐக்கிய முன்னணியாக ஆரம்பமாயிற்று. சரித்திரங் காணாத காலந்தொட்டுச் சுதந்தரமாக வாழ்ந்து வந்த தமிழ் இனததார் தங்கள் தாயகத்தின் சுதந்திரம் ஒன்றை நாடியே காங்கிரஸ் மகாசபையில் சேர்ந்தனர். தங்களைப்போன்றே பிரிட்டிஷாருக்கு அடிமைப்பட்ட இதர தேசிய இனங்களின் சுதந்திர உணர்ச்சியில் இரண்டறக் கலந்தனர். ஏனெனில் இந்தியா முழுவதும் சுதந்திரம் பெற்றாலொழிய எந்த ஒரு தனி இனமும் சுதந்திரம் பெறுவதென்பது முடியாத காரியமல்லவா?

இந்தியாவின் பொது எதிரியாகிய ஏகாதிபத்தியம் வெளியேறுமானால், தேசிய இனங்களின் உரிமைகளை அடிப்படையாகக்கொண்டு அந்தந்த இனங்களின் தாயகங்களில் பூரண சுதந்திரமுள்ள குடியரசுகள் அமைய வழி யிருக்க வேண்டும். இதைக் காங்கிரஸ் தலைமையினர் மறக்கவோ, மறுக்கவோ செய்வார்களானால் காங்கிரஸின் அஸ்திவாரத்தையே தகர்த்தவர்களாவார்கள்.

தமிழ் நாட்டுப் பிரதிநிதிகளே! உங்கள் இனத்தின் உரிமையைப் பறிகொடுக்காதீர்கள் "அழிந்து விட்ட, இனி அழியப்போகும் சாமராஜ்யங்களின் சுடுகாடு டில்லிநகர்"

3B
2-149



என்றார் காங்கிரஸ் தலைவர் கிருபாலினி. எதிர்காலத்தில் இன்னொரு இந்திய சாம்ராஜ்யத்தை அதே சுடுகாட்டில் அமைக்க இடங் கொடுக்காதீர்கள். உங்களுடன் சிறை புகுந்து சிப்பியேந்திச் சீரழிந்த ஒருவன் என்ற முறையில் சிரமேற் கரங்கூப்பி நான் செய்யும் வேண்டுகோள் இதுதான்:—

இந்தியாவின் சுதந்திரத்தைப் பிரகடனம் செய்து ஏகாதிபத்தியத்தை வெளியேற்றத் திட்டமிடுவதோடு இந்த இந்த அ. நி. சபையின் ஆயுளை முடித்துவிட முயலுங்கள்.

தேசீய இனங்களுக்குச் சுயநிர்ணயம் என்ற அடிப்படையில் வயது வந்த வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட மற்றோர் அரசியல் நிர்ணய சபையைக் கூட்ட விழையுங்கள்.

சுதந்திரக் காற்றால் ஆடிப்பறக்கும் தாயின் மணிக் கொடியின் கீழ்க் கூடுவதும், சுதந்திர இந்தியாவில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தேசீய இனங்களின் பிரதிநிதிகள் அடங்கியதுமாகிய அந்தப் புதிய அ. நி. சபைதான் இந்தியாவின் அரசியலை வகுக்கத் தகுதியும் உரிமையும் உள்ளதாகும்.

## தமிழினத்தின் கோரிக்கை!

சுதந்திர இந்தியாவில் சுதந்திரத் தமிழரசு

தமிழகத்தின் அரசியலை தமிழரே தயாரிக்க சுயநிர்ணயம்

துண்டுபட்ட தமிழ் நிலங்களை ஒன்றுபடுத்திப் புதிய தமிழகத்தை நிறுவுதல்.

வாழ்க தமிழினம்! வாழ்க தமிழரசு!

dal Padal Press, dras—Q. H. M. S. 491—10-12-46.

# தமிழ் முரசு

( மாதம் இருமுறை )

ஜனவரிமீ முதல் தேதியன்று

## முதல் இதழ்

வெளிவரும்

| | |
|---|---|
| ஆண்டுச் சந்தா | ரூ. 6—0—0 |
| 6 மாதச் சந்தா | ரூ. 3—0—0 |
| தனி இதழ் | 0—4—0 |

**வெளிநாடு**

| | |
|---|---|
| ஆண்டுச் சந்தா | ரூ. 7—8—0 |
| 6 மாதச் சந்தா | ரூ. 4—0—0 |
| தனி இதழ் | 0—5—0 |

ஏஜண்டுகள் தேவை

: விவரங்களுக்கு எழுதுக :

தமிழ் முரசுப் பதிப்பகம்,

233, லிங்க செட்டி தெரு,

சென்னை—1




Cover Page at Vani Printing Works, 156, Rasappa Chetty Street, P.T. Madras.